28
828
250

அணில்

ஆசிரியர்: வை. கோவிந்தன்   மார்ச் 1950   அணு நான்கு

OFFICE OF THE ... MADRAS
224242

எழுத்தறிவுப் போட்டி—1

போட்டி முடிவு

சரியான விடை: 1. மின்மணி, 2. தமிழர், 3. கால்மிதி, 4. பஞ்சமி.

குறிப்பு: இந்தப் பரிசுப் போட்டியில் ஏராளமான அணில் தங்கை, தம்பிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். சரியான விடை எழுதி அனுப்பினவர்கள் மொத்தம் 35 பேர். அவர்களுடைய பெயரும் விலாசமும் கீழே தரப்பட்டிருக்கிறது. பரிசு பெற்றவர்கள் அனைவருக்கும் பரிசுத் தொகை ரூ. 25/ஐ ஈவு செய்து, மணியார்டர் கமிஷன் கழித்து, ஆள் ஒன்றுக்கு 10 அணா வீதம் மணியார்டரில் அனுப்பியிருக்கிறோம். பெற்றுக் கொள்க.

பரிசு பெற்றவர்கள்: 1. R. ஸ்ரீதரன், கும்பகோணம் 2. R. கோவிந்தராஜன், இராமனுபுரம், 3. சிவ. பொன்னம்பலஜோதி, மதுரை, 4. ச. கோட்டை ராஜ், வத்தல குண்டு, 5. ப. கி. வெங்கட்ராமன், எல். என். பாளையம், 6. N. மீனாக்ஷி, கத்தாரி, பவானி, 7. V. கிருஷ்ணமூர்த்தி, கோயம்புத்தூர், 8. ஆ. காந்திமதி நாதன், சித்தாபுதூர், கோவை, 9. ஆர். தைலாம்பாள், கோவை, 10. டி. கணபதி, அய்யாபுரம், திருநெல்வேலி, 11. A. D. K. ஜனார்த்தனம், தூத்துக்குடி, 12. R. ராதா கிருஷ்ணன், சமுகரெங்கபுரம், திருநெல்வேலி, 13. K.G. சுப்ரமண்யம், ராணிப்பேட்டை, 14. நா. சத்தியசேகரன் குளித்தலை 15. N. K. ராஜகோபாலன், நாமக்கல், 16. D. சந்துரு, நாமக்கல், 17. R. மனுவேல், கோலக் கம்பை, நீலகிரி, 18. R. சுப்பிரமணியன், மாந்தை, தஞ்சை, 19. S. காளியப்பன், சித்துருவார்ப்பட்டி, திண்டுக்கல், 20. G. பரமேஸ்வரன், மைலாப்பூர், 21. K. ராமநாதன், ராயப்பேட்டை, 22. S. R. வெங்கட்ராமன், தியாகராயநகர், 23. C. சங்கரநாராயணன், தாம்பரம், 24. C. பழனிசாமி, தேனம்பட்டு, 25. T.R. நாராயணராஜு, மைலாப்பூர், 26. எம். எஸ். வெங்கட்ராமன், தியாகராய நகர், 27. S. சாம்பசிவன், அடையார், 28. V. கோதண்ட பாணி, பெரம்பூர் பாரக்ஸ், 29. A. முத்தவீரப்பன், அடையார், 30. மு. ஆறுமுகம், கர்னாட்டிக் மில் லயன், சென்னை, 31. வே. ராமச்சந்திரன், செங்கல்பட்டு, 32. L. சேது, வலையபட்டி, புதுக்கோட்டை. 33. அரு. காசி, புதுக்கோட்டை, 34. V. R. கிருஷ்ணசாமி, தின்னனூர், 35. V. D. பாப்புஅ, கடலூர்.

எழுத்தறிவு இலவசப் போட்டி—3

பரிசு ரு. 25/- :: முடிவு தேதி: 20-3-'50

பரிசு

1 வி				
2 வி				
3 வி				
4 வி				
5 வி				

கூப்பன்

பெயர் ....

வீதி, ஊர், தபாலாபீஸ் ....

....

ஜில்லா ....

குறிப்பு :—மேலே உள்ள கட்டங்களில் (இடமிருந்து வலமாய்) ஐந்து வார்த்தைகளுக்கு விடை கண்டுபிடித்து எழுதவேண்டும். முதல் எழுத்து "வி" என்பதை கொடுத்திருக்கிறது. விடைகளை இதே கூப்பனில் "அணில் அண்ணன், சக்தி காரியாலயம், சென்னை—14" என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்ப வேண்டும். கவரில் "**எழுத்தறிவு இலவசப் போட்டி-3**" என்று குறித்தனுப்புக.

1. இவரைக் கண்டால் எல்லாரும் சிரிப்பார்கள்.
2. இலக்கணப் பாடத்தில் இது அடிக்கடி வரும்:
3. செய்யுள் வகைகளில் ஒன்று:
4. இது ஆந்திர தேசத்தில் உள்ள ஒரு பட்டணம்.
5. மற்றொருவரிடம் இதைக் கொள்ளாதே என்று சொல்லுவார்கள்.

Edited and Published by Vai. Govindan, 115-E, Mowbray's Raod, Madras-14 & Printed by J. Chelliah at Papa Press, 80, General Patters Road, Madras-2.

அணில்

மலர் 4 மார்ச், 1950 இதழ் 5

தங்கைகளே! தம்பிமார்களே!!

அமெரிக்க மக்கள் இப்பொழுது உயரமாகவும், கனமாகவும் இருக்கிறார்களாம். பத்து வருஷத்திற்கு முன்னால் மக்கள் சராசரி இருந்த எடையைக்காட்டிலும் அதிக எடை இருக்கிறார்கள். பத்து வருஷத்திற்கு முன் சராசரி இருந்த உயரத்தைக் காட்டிலும் வளர்ந்திருக்கிறார்களாம். இதற்கு என்ன காரணம்? ஆகார ஒழுங்குதான். நீங்கள் வளர வேண்டாமா? கனமாக வேண்டாமா?

நீங்கள் வளரவேண்டும். பலசாலியாகவேண்டும். அதற்காக நமது உணவுப் பொருள்களின் தன்மையை உங்களுக்காக 'அண்ணா' ஒருவர் எழுதுகிறார். இந்த இதழிலே 'உலக மாதா' என்று ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். படித்துப் பாருங்கள்.

கடலோடியின் கதை ஐந்தாவது பிரயாணம் ஆரம்பமாகிவிட்டது. முந்திய பிரயாணங்களைக் காட்டிலும் ஆச்சரியமாக இருக்கும்.

படங்கள் ஏராளம். புதிதாக இரண்டு சித்திரக்காரர்களின் படங்களும் கதைகளை அலங்கரிக்கின்றன.

அட்டைப் படத்தைப் பார்த்தீர்களா? தமிழ் தம்பி தங்கைகளின் ஒப்பற்ற விளையாட்டு. இதுதான் கண்ணாமூச்சு. கண்ணாமூச்சு விளையாடும் உங்கள் கூட்டாளிகளின் படம்தான் அட்டையை அலங்கரிக்கிறது.

முதலாவது எழுத்தறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், பரிசு பெருதவர்களுக்கும் எனது வாழ்த்து.—பரிசு பெற்றவர்கள், பெருதவர்கள், இந்த இதழில் உள்ள 3-வது பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளுங்கள். வெற்றி யடைவீர்கள்.

கேள்வி பதிலைப் படியுங்கள். உங்கள் அறிவை வளர்த்துக் கொள்வதற்குக் கேள்வி - பதில் ஒன்றே போதும். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எழுதி யனுப்புங்கள். அவைகளுக்கும் கேள்வி—பதிலில் பதில் வரும்.

2-வது எழுத்தறிவுப் போட்டியின் விடையனுப்பும் தேதியை 20-3-50க்கு மாற்றி வைத்திருக்கிறேன்.

நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். அது என்ன? அணில் வெளியீடு கதைப் புத்தகங்களை நீங்கள் படித்திருப்பீர்கள். 'சிலையும் குருவியும்' என்ற எட்டணு விலையுடைய புத்தகம் வெளிவந்திருக்கிறது. ஓரணு விலை வைத்து 32 பக்கங்களில் 'முடியாது', 'புஷ்கோட்' என்று வெளிவந்தன. 'சிலையும் குருவியும்' போன்று பெரிய எழுத்தில் அச்சிட்டு எட்டணு விலையில் வெளி வரும் புத்தகங்களை நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது ஓரணு விலையில் வெளிவரும் புத்தகங்களை விரும்புகிறீர்களா? உங்கள் எண்ணத்தை எனக்குச் சொல்லவேண்டும். முக்காலணு கார்டில் எழுதி அனுப்புங்கள்.

இந்த இதழில் பாரதி கதை வெளிவந்திருக்கிறது. இதுபோல பெரியார்களின் சரித்திரத்தில் நடந்த கதைகள் ஒவ்வொரு அணிலிலும் வெளிவரும். படியுங்கள். அத்தப் பெரியார்களைப்போல் நீங்களும் ஆக வேண்டாமா?

பிப்ரவரி இதழ் இன்னும் வெளி வரவில்லையே என்று பலர் எழுதி இருக்கிருர்கள். பிப்ரவரி இதழ்தான் குடியரசு மலராக வெளிவந்தது. இந்த இதழ் மார்ச் மாத இதழ்.

தங்க மீன்

நடனம்

எகிப்து தேசம். அதை வெகுகாலத்துக்கு முன் ஒரு ராஜா ஆண்டு வந்தான். அவனுக்கு வயதாகிவிட்டது. கிழவன் வியாதி வந்தது. கண்பார்வையை இழந்தான். உடல் நலிந்தான். மெலிந்தான். ஊரிலுள்ள பெரிய பெரிய வைத்தியர்கள் எல்லாரும் வந்து பார்த்தார்கள். வைத்தியம் செய்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. அரசன் இறந்துவிடுவான் என்று எல்லாரும் முடிவுகட்டினார்கள். ராஜாவிற்கு ஒரே ஒரு மகன். அவனும், தகப்பன் செத்துப்போய் விடுவான் என்றே பயந்தான்.

இப்படி இருக்கையில், வெகு தூரத்திலிருந்து ஒரு வைத்தியன் எகிப்திற்கு வந்தான். அவன் ஊருக்குப் புதியவன். நைல்நதிக் கரையில் ஒரு சிறு தேசம் இருந்தது. அந்த தேசத்தின் ராஜாவுக்குக் குடும்ப வைத்தியனே, அவன். தன்னை அனுமதித்தால் எகிப்து அரசனின் கண்நோயைப் பரிசோதித்துப் பார்ப்பதாகச் சொன்னான். அனுமதித்தனர். அந்த வைத்தியன், அரசன் கண்ணைப் பரிசோதித்தான். வியாதி கொடியதுதான் என்றாலும், குணப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகச் சொன்னான். இதைக் கேள்விப்பட்ட ராஜகுடும்பத்தினரும் ஊர்மக்களும் ரொம்ப சந்தோஷம் அடைந்தார்கள்.

வைத்தியன் இளவரசனை அழைத்தான். "இளவரசே! உமது தந்தையின் கண்ணோயை குணப்படுத்த, ஒரேஒரு வழிதான் எனக்குத் தோன்றுகிறது. நடுக்கடலில், ஆழிய சமுத்திரத்தில் தங்க நிறமுள்ள தலையை உடைய பொன்னிறமான ஒரு மீன் வசிக்கிறது. அதைப் பிடிப்பது மிகமிக அருமை. எப்படியாவது அந்த தங்க மீனைப் பிடித்துக் கொண்டு வந்தால், அதன் ரத்தத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு களிம்பு செய்து தருகிறேன். அந்த மருந்து நிச்சயம் உமது தந்தையின் வியாதியைக் குணப்படுத்தி விடும் என்று நம்புகிறேன். நான் இன்று முதல் நூறு தினங்கள், இங்கே இருக்கிறேன். அதற்குள் தங்கமீன் அகப்பட்டால் சரி. இல்லாவிட்டால், நான் என் தேசத்துக்குத் திரும்பிவிடுவேன்" என்றான்.

இதைக் கேட்டான் இளவரசன். மறுநாள் காலையில் நூறு செம்படவர்களுடனும், படகுகள், வலைகள் சகிதமாய் அந்த மீனைப் பிடித்துவரச் சென்றான். மீன் படகுகள் சமுத்திரத்தில் சென்றன. நடுக்கடலை அடைந்தன. வலைகளை வீசி வீசிப் பார்த்தார்கள். எத்தனையோ விதவிதமான மீன்கள் வலையில் சிக்கின. ஆனால் அந்த வைத்தியன் குறிப்பிட்ட தங்கமீன் மட்டும் அகப்பட

வில்லை. காலைமுதல் மாலைவரை வலையை வீசிவீசிப் பார்த்தும் பய னில்லை. நாட்கள் விரைந்தோடின. மாதம் மூன்று கடந்தது. தங்க—மீன் இன்னும் அகப்பட வில்லையே என்று, இளவரசன் மனம் சோர்ந்தான். செம்படவர்களும் அலுத்தனர். குறிப்பிட்ட நூறுவது நாளும் நெருங்கிவிட்டது இளவரசனுக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. தந்தையின் கதி என்ன ஆயிற்றோ என்று மனம் வருந்தினன். வைத்தியர் திரும்பியிருப் பாரோ என்று கவலைப்பட்டான். இருந்தாலும், முயற்சியைத்

தளரவிடவில்லை. நூறுவது நாள் மாலையில் கடைசித் தடவையாக இளவரசன் வலையை வீசினன். அகப்பட்டது தங்கமீன்! அவன் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. விடாமுயற்சி வெற்றி அளித்தது. ஆனல், வெற்றி உலகில் எப்போதும் உடனே வருவதில்லை. அது தாமதித்தே வருகிறது. இது இயற்கை அல்லவா?

தங்கமீனை ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குள் வைத் தியன் திரும்பிவிடுவான், என்று நினைத்தான் இளவரசன். அவன் குறிப்பிட்ட நூறுவது நாள் முடிந்துவிட்டது அல்லவா? பிறகு

இளவரசனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தங்கமீனை பிடித்துக்கொண்டுபோய் அரசனிடமாவது காட்டுவோம் என்று நினைத்தான். அப்போதாவது தன் முயற்சியைப் பற்றி சந்தேகப் படாமல் தந்தை மனம் ஆறுதல் அடைவார் என்பது இளவரசனுடைய உத்தேசம். உடனே வலையில் சிக்கிய தங்க மீனை படகின் அருகில் வலையுடன் இழுத்தான். தங்கமீன் 'இளவரசனை கெஞ்சிக் கேட்பதுபோல் உற்றுநோக்கி, "இளவரசனே, இளவரசனே! என்னைக் கொல்லாதே. சும்மா விட்டுவிடு. உயிர்ப்பிச்சை தா. எங்கள் இனத்தில் நான் ஒருவனே இந்த சமுத்திரத்தில் வசிக்கிறேன். நான் இறந்தால் எங்கள் வமிசமே அற்றுப் போகும். கருணைவை. என்னை விடுவித்துவிடு" என்று மன்றாடிக் கேட்டது. இதைக்கேட்டதும் இளவரசனின் மனம் பெரும் வேதனை அடைந்தது. உள்ளம் உருகியது. கருணைமேலிட்டது. இளவரசனே இளகிய நெஞ்சுடையவன். 'சரி, மீனே! உன்னை நான்கொல்லவில்லை. பயப்படாதே. உன் ரத்தத்தை மட்டும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு, உன்னை மீண்டும் கடலில் விட்டுவிடுகிறேன். பிழைத்துப் போ" என்றான். அப்படியே சிறிது ரத்தத்தைப் பிடித்துக்கொண்டு தங்கமீனை கடலில் விட்டுவிட்டான். தங்கமீன் தப்பிப் பிழைத்தோம் என்று தாவித் துள்ளி ஓடியது. அந்த ரததத்தை கொண்டுபோய் தன் ஊரிலுள்ள வேறு வைத்தியர்களிடம் கொடுத்தாவது, தகப்பனின் கண்ணுக்கு மருந்து செய்யச் சொல்லலாம் என்பது, இளவரசனின் எண்ணம். பிறகு இளவரசன், தன் பரிவாரங்களுடன் எகிப்திற்குத் திரும்பினான்.

> ## மூன்று புது கிரகங்களை ருஷ்யர் கண்டுபிடித்திருக்கிறார்கள்!
>
> மூன்று புது கிரகங்களை சோவியத் வான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இவை செவ்வாய் கிரகத்திற்கும் புதன் கிரகத்திற்கு இடையே உள்ள கதிகளில் சுற்றி வருகின்றனவாம். இவைகளுக்கு அவர்கள் 'மாஸ்கோ' 'ருஷ்யா' 'தூம்ஸோமாலியா' என்ற பெயர்களை வைத்திருக்கின்றனராம்.
>
> இதுவரை சோவியத் வான சாஸ்திரிகள் 113 சிறு கிரகங்களை கண்டு பிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நேரே அரண்மனைக்குச் சென்றான். தகப்பனைப் பார்த்தான். தந்தை மகனுடன் பேசவில்லை. ஒரே கோபம். காரணம் குறித்த காலத்திற்குள், மகன் தங்கமீனைப் பிடிததுக் கொண்டு வரவில்லை என்ற வருத்தம். தந்தைக்கோ காய்ச்சல் வெறி. மகன் என்ன சமாதானம் சொல்லியும் அப்பன் நம்பவில்லை. வீணே பொழுது போக்கிவிட்டான் மகன் என்று நினைத்தான். தன் ஆபத்திற்கு உதவாத பிள்ளை, இருப்பதிலும் இறப்பதே மேல் என்று எண்ணி ஆத்திரமுற்றான். காவலாளிகளை அழைத்தான். "இவனை (இளவரசனை) உடனே சிரச்சேதம் செய்யுங்கள். தலையை வெட்டி உடனே தகவல் தெரிவியுங்கள்" என்றான். அரசன் ஆக்ஞை அல்லவா? விரை

தனர் காவலாளிகள். தூக்குமேடைக்கு இளவரசனை இழுத்துச் சென்றனர்.

இந்தச் செய்தி உடனே ராணியின் காதுக்கு எட்டியது. அரசன் உத்தரவைக் கேட்ட ராணி, மனம் துடித்தாள். எப்படியாவது மகனைக் காப்பாற்ற எண்ணினாள். காவலாளிகளிடம் சொல்லி ஒருவரும் அறியாது, மகனை ரகசியமாய் அழைத்து வந்தாள். அவனுக்கு வேறு உடைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னாள். அவன் பை நிறைய தங்கமோகராக்களை நிரப்பினாள். அன்றிரவே ஒரு கப்பலில் மகனை ஏற்றி, வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு தீவிற்கு வழி அனுப்பிவிட்டாள். அனுப்பும் போது மகனிடம் ஒரு முக்கிய குறிப்பு மட்டும் சொல்லி அனுப்பினாள். "அப்பா மகனே! உன் தந்தை ஆத்திரத்தில் உன்னைச் சிரச்சேதம் செய்யும்படி உத்திரவிட்டு விட்டார். பின் ஒரு சமயம் ஐயோ, அருமை மகனைக் கொலை செய்யச் சொல்லிவிட்டோமே' என்று ஏங்கி வருந்துவார். அப்போது நீ உயிருடன் இருந்து வருகிறாய் என்பதை அவர் அறிந்தால், ரொம்ப சந்தோஷமடைவார். அதனால்தான் இந்த யோசனை செய்தேன். வருந்தாதே போய் வா. உடம்பைக் கவனமாய்ப் பார்த்துக்கொள். உனக்கு மேலும் ஒரு புத்திமதி சொல்லி அனுப்புகிறேன். அதை நினைவில் வைத்துக்கொள். ஒருக்காலும் மறக்காதே. அதாவது மாதாமாதம் உன்னிடம் சம்பளம்கேட்கும் எந்த வேலையாளையும், நீ வேலைக்கு வைத்துக்கொள்ளாதே" என்றாள்.

இதைக் கேட்டதும் மகனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. "மாதாமாதம் சம்பளம் கொடுத்தால என்ன? அல்லது வருஷக்



செய்து பார்

இரண்டு கைகளையும் ஒன்றின் மேல் ஒன்றை வைத்து, விரல்களைச் சேர்த்துக் குவித்து, படத்தில் காட்டியிருப்பது போல் செய்து பார். அதன் நிழல், சுவற்றில் விழும்போது, துதிக்கையும் தந்தமும் கொண்ட யானைத் தலை போலிருக்கும்.

கடைசியில் கொடுத்தால் என்ன? உழைத்தவன் சம்பளத்தை பாக்கி இல்லாமல் என்றைக்கும் கொடுக்கவேண்டியதுதானே நியாயம்'' என்று நினைத்தான். தாயின் சொல்லைத் தட்ட அவனுக்கு மனமில்லை. ஆதலால் அவள் சொல்படி நடக்க மனமிசைந்தான்.

இளவரசன் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு, தனது கடல் பிரயாணத்தைத் தொடங்கினான். சில நாட்கள் சென்றன. கப்பல் குறிப்பிட்ட தீவிற்கு வந்து சேர்ந்தது. அங்கே இறங்கினான். ஊரைச் சுற்றிப் பார்த்தான். அந்தத் தீவின் சோலைகளும், ஆறுகளும், குன்றுகளும், பசிய தோற்றமும், வெண் சாந்து பூசிய மாளிகைகளும் இளவரசனுக்கு இன்ப மூட்டின. தன்னிடமுள்ள தங்க மோகராக்களைக் கொண்டு, அங்குள்ள ஒரு கட்டிடத்தை விலைக்கு வாங்கினான். அதில் குடியிருக்க ஆரம்பித்தான். இளவரசனிடம் பல ஆட்கள் வந்து வேலை கேட்டார்கள். மாதந்தோறும் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றார்கள். தாயாரின் புத்திமதி ஞாபகத்திற்கு வந்தது. மாதச் சம்பளத்தில் வேலையாள் சேர்க்க, அவன் விரும்பவில்லை. முடிவில் ஒரு அரபிக்காரன் வந்தான். வேலைக்கு வருகிறேன் என்றான். என்ன சம்பளம் கேட்கிறாய் என்று அவனை இளவரசன் கேட்டான். "இளவரசே! எனக்குப் பணம் தேவை இல்லை. உங்களுக்கு வருஷம் முழுதும் உண்மையுடன் வேலை பார்க்கிறேன். நான் பார்க்கும் வேலை உங்களுக்குத் திருப்தி அளித்தால், அந்த வேலைக்கு என்ன சம்பளம் கொடுக்கலாம் என்று நீங்கள் விருப்பப்படுகிறீர்களோ, அதைக் கொடுத்தால் போதும். தருவதை சந்தோஷமாய்ப் பெற்றுக் கொள்ளுகிறேன்'' என்றான். இதைக் கேட்ட இளவரசன் மிகுந்த சந்தோஷம் அடைந்தான். பிறகு அந்த அரபிக்காரனை வேலையில் அமர்த்திக் கொண்டான்.

அந்தத் தீவில் இளவரசன் வசித்த பகுதிதான் செழிப்பாய் இருந்தது. மற்றொரு பகுதியில் பயிர்கள் காய்ந்து, ஆடு மாடுகள் எல்லாம் செத்து, மனித சஞ்சாரமே இல்லாமல் பாலைவனம் போல் பாழடைந்து கிடந்தது. ஏன் தெரியுமா? அந்தத் தீவின் கடலோரத்தில் ஒரு ராட்சஸ மிருகம் வசித்து வந்தது. அது இரவு நேரங்களில் நடுச் சாமத்தில் எல்லாரும் தூங்கும் போது கடலுக்குள்ளிருந்து வயல்களை நோக்கி ஓடி வரும். எதிர்ப்பட்டவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களை ஒரே அடியில் அடித்துக் கொன்று தின்று விடும். ஆடு மாடுகளின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து விடும். அவை பிழைப்பதில்லை. வயல்களில் உள்ள தானியங்களை எல்லாம் அந்த ஜந்து நாசஞ் செய்து வந்தது. தீவின் ஒரு பகுதியே பாழ் அடைந்தது. அந்தத் தீவு, ஒரு கவர்னரின் ஆளுகையில் இருந்தது. அவர் ஊரெங்கும் பறையறிவித்தார். பல வீரர்களை அனுப்பி, அந்தக் கொடிய ராட்சஸ மிருகத்தை எந்த விதத்திலாவது கொன்று விடும்படி ஏவினார். ஒருவராலும் முடியவில்லை. ஏவலாளர்கள் இரவில் தூங்கும் சமயம் பார்த்தே, அந்த அபூர்வப் பிராணி, வேட்டையாட கடலில் இருந்து வெளியே வரும். கடைசியாக, கவர்னர் ஒரு உபாயம் செய்தார். "யார் அந்த மிருகத்தைக் கொன்று விட்டு, எனக்கு அடையாளம் கொண்டு வந்து

காட்டுகிறார்களோ, அவர்களுக்கு ஏராளமான பொருள் இனாம் தருகிறேன்'' என்று பிரகடனம் செய்தார்.

இதைக் கேள்விப்பட்டான், இளவரசனின் அராபிய வேலைக்காரன். நேரே கவர்னரிடம் சென்றான். "ஐயா! தங்கள் பிரகடனத்தைக் கேள்விப்பட்டேன். அந்தக் கொடிய மிருகத்தை என் எஜமான் கொன்று விட்டால், அவருக்கு என்ன சன்மானம் தருவீர்கள்?" என்று கேட்டான். "என் பெண்ணையே கலியாணம் செய்து கொடுக்கிறேன். அத்துடன் அவர் எது வேண்டுமானாலும் அதைக் கொடுக்க சித்தமாய் இருக்கிறேன்'' என்றார் கவர்னர். "நல்லது உங்கள் பெண்ணைக் கொடுங்கள். சொத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பணம் அவளுடைய ஸ்ரீதனமாக உங்களிடமே இருக்கட்டும்'' என்றான் அராபியன். கவர்னர் இதற்கும் சம்மதித்தார். இருவரும் சேர்ந்து ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்து வைத்துக் கொண்டார்கள்

பூகோள வாத்தியார் :— டேய் சோமு! ஆறுகள் எப்படி உண்டாகின்றன?

சோமு :— ஒன்றையும், ஐந்தையும் கூட்டினால், இரண்டையும் நான்கையும் கூட்டினால், மூன்றையும் மூன்றையும் கூட்டினால் ஆறுகள் நிச்சயம் உண்டாகும் சார்!

அராபிக்காரன், எப்படியாவது அந்த மிருகத்தைக் கொன்று விட்டு வருவதெனத் தீர்மானித்தான். கையில் பளபள வென்று மின்னும் கூர்மையான கத்தி ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டான். உடம்பு முழுதும் ஒருவகைத் தைலம் ஒன்றைப் பூசிக் கொண்டான். இந்த தைலத்தைத் தேய்த்து கொண்டால் தூக்கமே வராது. கொடிய விஷ ஜந்துகள் தீண்டினாலும், விஷம் ஏறாது. அராபியன் கடலோரத்திற்குப் போனான். அங்கே ஒரு சிறு குன்று இருந்தது. சந்தடி செய்யாமல், அந்தக் குன்றின் ஒருபக்கம் மறைவில் ஒளிந்து கொண்டிருந்தான். உருவிய கத்தியை ஓங்கியபடியே கையில் பிடித்திருந்தான். நடுச்சாமம் ஆயிற்று. எங்கும் நிசப்தம். அப்போது கடல் தண்ணீர் கொதிப்பது போல் மளமள வென்று ஒரு சப்தம் கேட்டது. தண்ணீரை விட்டு நீந்தி, கரை மேல் காலடி வைத்து மெதுவாக நடந்துவந்தது, ஒருஜந்து. அதன் தலையைப்பார்த்தால், கழுத்து கொக்குப் போல் நீண்டு, பறவை இனத்தைச் சேர்ந்த ஒரு பட்சியைப் போலிருந்தது. வயிற்றையும் கால்களையும் பார்த்தால், ஒரு மிருகத்தைப் போலிருந்தது. வாலைப் பார்த்தால் பாம்பைப் போல் நீண்டு வளைந்து நெளிந்திருந்தது. அராபிக்காரன் ஒளிந்து கொண்டிருந்த குன்றின் அருகே அந்த ஜந்து வந்தது. வந்ததுதான் தாமதம். உடனே, அதன் வயற்றில் கத்தியை

ஓங்கிப் பாய்ச்சினன்; இழுத்தான். வயிற்றைக் கிழித்தான். குடல் பிதுங்கி, வெளியே வந்து தள்ளியது. அந்தத் தீயவிலங்கு உருண்டு பிரண்டது. அது போட்ட சத்தம் இடி போலிருந்தது. காலேயும் தலையையும் படபட வென்று அடித்துக் கொண்டது. அதன் உயிர் போயிற்று. பிணமாயிற்று. பார்த்தான் அராபியன். ஒளிந்தது சனியன் என்று நினைத்தான். மச்சம் காட்டுவதற்காக அதன் காதுகள் இரண்டையும் அறுத்து எடுத்துக் கொண்டான். தன் எஜமானிடம் (இளவரசனிடம்) சென்றான். நடந்ததைச் சொன்னான்: "எஜமானே! இந்தாருங்கள், அந்த ஜந்துவின் காதுகள். இவற்றைக் கொண்டுபோய் கவர்னரிடம் கொடுங்கள். அதை நீங்களே கொன்றதாகச் சொல்லுங்கள். உடனே செல்லுங்கள்" என்றான்.

"வேலேக்காரா! அந்த மிகருத்தைக் கொன்றவன், நீ யல்லவா? நான் கொல்லாதிருக்கும் போது, எப்படிப் பொய் சொல்லுவேன்? என்று மறுத்தான். அராபியன் விட வில்லே. "எஜமானே! நான் சொல்லுவதை, தயவு செய்து, தட்டாமல் செய்யுங்கள். அதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. போய்ச் சொல்லுங்கள்" என்றான். இளவரசனே சத்திய வந்தன். பிறர் செய்த அரிய காரியத்தை, தான் செய்து விட்டதாய் கனவில் கூட பெருமை கொள்ளாதவன். வேலேக்காரன் சொல்லியதைத் தட்டிப் பேசாமல், கவர்னரிடம் இளவரசன் சென்றான். அந்தக் கொடிய மிருகத்தை தானே கொன்று விட்டு வந்ததாய்ச் சொன்னான். அறுத்து வந்த காதுகளே அடையாளம் காட்டினன்.

கவர்னர் ஆச்சரியப்பட்டார். அவர் சந்தோஷத்திற்கு எல்லேயே இல்லே. தன் பெண்ணே அன்று தினமே கல்யாணம் செய்து கொள்ளும்படி இளவரசனே வற்புறுத்தினர். அதற்கு இளவரசன் சம்மதிக்க வில்லே. "அன்புடைய கவர்னர் அவர்களே! தங்கள் உபசாரத்திற்கு மிக நன்றி. நான் இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லே. நான்கு திசைகளிலும் கடலில் சஞ்சரித்து உலகைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். முடியுமானல், எனக்கு அதற்காக ஒரு கப்பல் தந்து உதவுங்கள். அது போதும்" என்றான்.

அடுத்த நாளே கப்பல் தயாராயிற்று. எஜமானும் வேலேக்காரனும் அதில் ஏறினர்கள். கப்பலில் தேவையான ஆகார வகைகளும், பொன்னும் மணியும், ஆடை ஆபரணங்களும் குவிந்திருப்பதைக் கண்டார்கள். ஆனந்தங் கொண்டார்கள்.

கப்பல் புறப்பட்டது. ஆழிய கடலில் சஞ்சரித்தது. பல நாட்கள் ஆயின. மாதங்கள் ஆயின. ஒரு நாள் காலேயில் ஒரு பெரிய நகரத்தின் துறைமுகத்தை வந்து அணுகியது கப்பல். இருவரும் கரையில் இறங்கினர்கள். அந்த அழகிய நகரத்தைச் சுற்றிப் பார்த்து, அதன் புதுமைகளே அறிந்து வரப் புறப்பட்டான், அராபியன். இளவரசன் அருகில் இருந்த சோலேயில் ஓய்வெடுத்துக் கொண்டான்.

வேலைக்காரன் மாலையில் திரும்பி வந்தான். அந்த தேசத்தின் ராஜகுமாரி உலகத்திலேயே சிறந்த அழகி என்று கேள்விப் பட்டான். அந்த இளவரசியை, எப்படியாவது முயற்சித்து, கலியாணம் செய்து கொள்ளும்படி இளவரசனுக்கு வற்புறுத்தினான். கலியாணம் செய்து கொள்ள இளவரசனுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் தன் உண்மையுள்ள அராபிய வேலைக்காரனின் சொல்லை அவனால் தட்ட முடியவில்லை. உடனே இளவரசன் அழகான குதிரை ஒன்றை விலைக்கு வாங்கினான். கப்பலில் இருந்த ஆபரணங்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டான். வேலைக்காரன் பின் தொடர, நேரே அந்த தேசத்தின் ராஜாவிடம் சென்றான். "மகராஜ்! இதோ சில ஆபரணங்கள். அவற்றை என் அன்பின் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள். தங்கள் பெண், உலகிலேயே பேரழகி என்று கேள்விப்பட்டேன். அவளை நான் கலியாணம் செய்து கொள்ள விரும்பியே, இங்கு வந்தேன். தங்களுக்கு சம்மதமா?" என்றான்.

இளவரசன் சொல்லியதை, வேந்தன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். பதில் சொல்ல, கொஞ்சம் தயங்கினான். "இளைஞனே! உன்னைப் பார்த்தால் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவனைப் போல் தோன்றுகிறதே. என் மகளையே கண்டிப்பாய்க் கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உனக்கிருந்தால் அந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்து தர எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் முதலில் உனக்கு ஒரு எச்சரிக்கை செய்து விடுகிறேன். இதுவரை அவளை விரும்பி, கலியாணம் செய்து கொள்ள முன்வந்த இளைஞர்கள் சுமார் நூற்றித்தொண்ணூறு பேர்கள். கலியாணச் சடங்குகள் முடிந்து, பன்னிரண்டு மணி நேரத்திற்குள் அவர்கள் ஒவ்வொருவரும் இறந்துபோனார்கள். ஒருவர் கூட உயிர் தப்பவில்லை. நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல். உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்" என்றான். இதைக் கேட்ட இளவரசன் திடுக்கிட்டான். திரும்பி விடுவோமென நினைத்து எழுந்தான் அதற்குள் அவன் வேலைக்காரன், "பயப்பட வேண்



எஜமான்: டேய் கூலிக்காரா! எங்கள் வீட்டில் ஒரு பெட்டி இருக்கிறது. அதை ஸ்டேஷனுக்கு எடுத்துக் கொண்டு போக எவ்வளவு கூலி கேட்பாய்?

கூலிக்காரன்:- கூலியே வேண்டாங்க எஜமான்! நீங்க மட்டும் இங்கேயே இருங்க- பெட்டி காணாமல் பறக்கும் பாருங்க!

டாம். சிற்சில சமயங்களில் கெடுதல் நன்மையாக மாறி விடுவது உலக இயற்கை. கலியாணம் செய்துகொள்ள மறுக்கவேண்டாம்'' என்று இளவரசன் காதில் மெதுவாகச் சொல்லி, அவனை ஊக்கினான். பிறகு மனம் ஒருவாறு திடப்பட்டு, "சரி அரசே! உங்கள் மகளை எனக்குக் கலியாணம் செய்து கொடுங்கள்'' என்றான் இளவரசன்.

அன்றிரவே இளவரசனுக்கும் அந்ததேசத்து இளவரசிக்கும் கலியாணம் நிறைவேறியது. சடங்குகள் முடிந்தன. நிலாச் சாப்பாட்டிற்கு, பெண்ணும் மாப்பிள்ளையும், ஒரு தனி அரண்மனைக்குச் சென்றார்கள். சாப்பாடு முடிந்தது. இரவு 12 மணி இருக்கும். அங்குள்ள காட்சிகளைக் காண ஆவல்கொண்டு, உப்பரிகையின் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தான் இளவரசன். அங்கே ஒரு பெரிய பாடை ஒன்று கட்டி, சில்க் துணியால் மூடி, அதில் இந்த இளவரசனுடைய பெயர் ஜரிகை எழுத்துக்களால் நெய்திருந்தது. சற்று வலது புறம் திரும்பி, கீழே உற்று நோக்கினான். சுமார் நூறு ஆட்கள் அந்த ஜன்னலுக்குக் கீழே, ஆழ நீளமாகப் புதைகுழிஒன்று வெட்டிக்கொண்டிருந்தார்கள். இந்தகாட்சிகளைப் பார்த்ததும் திடுக்கிட்டான் இளவரசன். ஆனால் தைரியத்தைக் கைவிடவில்லை. பேச, நாக்கு எழவில்லை. பயத்தால் கால்களும் கைகளும் பின்னின. நடப்பது நடக்கட்டும் என்று தைரியமாய் இருந்தான். பிறகு இளவரசியின் முன்னே வந்து உட்கார்ந்தான் இளவரசன். வாய்பேசவில்லை. பயத்தால் அவன் உடல் வியர்த்தது. இவற்றை எல்லாம் முன் எச்சரிக்கையுடன் கதவுமறைவில் ஒளிந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தான். இளவரசனின் உண்மையுள்ள அராபிய வேலைக்காரன். அவன் தன் எஜமானுக்கு எவ்வித ஆபத்து வந்தாலும், அதைத் தடுக்க தயாராய் இருந்தான்.

இளவரசி வாயைத் திறந்து இளவரசனுடன் பேச ஆரம்பித்தாள். அவ்வளவுதான் தாமதம்! அவள் வாயிலிருந்து தலையை நீட்டியது, ஒரு கொடிய கரு நாகம்! இளவரசனைக் கடிக்க முயன்றது அந்தநாகம். இளவரசன் பயந்து பின்சென்றான். பாம்பு சிறிது சிறிதாக முன்னே தலையை நீட்டியது. இந்த ஆபத்தான கட்டத்தைப் பார்த்தான், மறைந்து நின்ற அராபிய வேலையாள். எடுத்தான் இரும்பினால் செய்த இடுக்கியை. நறுக்கென்று, பாம்பின் கழுத்தை அதனால் பிடித்துக் கொண்டான். பிறகு கத்தியால் பாம்பின் கழுத்தை இரண்டு துண்டாக்கினான். கருநாகம் செத்தது. இது அந்த இளவரசிக்கு ஏற்பட்டிருந்த ஒரு பெரும் சாபம். அந்தோ! இந்த வாய்ப் பாம்பால் எத்தனை இளைஞர்கள் இவளை மணக்க வந்து பிணக்கோல மானார்கள்.

அடுத்த நாள், பொழுது விடிந்தது. அரசனைப் பேட்டிகாண வேணுமென்று சொல்லி அனுப்பினான், புதிய மாப்பிள்ளை. நேரே அரசன் அருகே சென்றான். அரசனுக்கு ஆச்சரியம் ஒரு புறம் சந்தோஷம் மறுபுறம்.

இளவரசன் நடந்தவிஷயத்தை அரசனிடம் சொல்லக்கூடாது என்று நினைத்தான். "அரசரே! என் இன்பமாளிகையின் உப்பரிகை

ஜன்னலின் கீழ், ஒரு பெரும் புதைகுழி வெட்டியிருக்கிறார்கள். அது அவலட்சணமாய் இருக்கிறது. உடனே அதை மூடிவிடும்படி உத்தரவிடுங்கள்'' என்றான். ''அப்படியே செய்யச் சொல்லுகிறேன்'' என்றான் அரசன்.

சில மாதங்கள் ஆயின. இளவரசியைப் பிடித்திருந்த சாபமும் நீங்கியது. இளவரசனும் இளவரசியும், பூவும் மணமும் போல் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் காலம், வேட்டை ஆடுவதிலும், உல்லாச யாத்திரை செய்வதிலும், ஆற்றில் ஓடம் விட்டு மகிழ்வதிலும் கழிந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் சாயுங்காலம் இளவரசன் இளவரசியுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அரண்மனை வாசலில் ஒரு கட்டியக்காரன் வந்து நின்றான். ''அரசே! தங்கள் புது மாப்பிள்ளைக்கு ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அவருடைய தந்தை, எகிப்து தேசத்தின் சக்ரவத்தி. அவர் நோயினால் இறந்தார். ராணி அன்னை தன் மகனுக்குப் பட்டம் சூட்டுவதாய்ப் பிரகடனம் செய்திருக்கிறார். அவரே தங்கள் புது மாப்பிள்ளை. அவரை எகிப்துக்கு அழைத்துப் போகவே இங்கு என்னை அனுப்பினார்கள்'' என்றான்.



அமெரிக்கக் குடியரசின் 16-வது ஜனாதிபதியும், விடுதலை வீரனுமான அப்ரஹாம் லிங்கன் சிறந்த ஜனநாயக வாதி.

அவர் சொல்லுகிறார்:

''நான் எப்படிப் பிறருக்கு அடிமையாய்இருக்க ஒருபோதும் விரும்ப மாட்டேனோ, அதே போல் அடிமையை ஆளும் எஜமானாக இருக்கவும் ஒரு போதும் விரும்பேன். இதுதான் ஜனநாயகத்தைப்பற்றிய என் ஆழ்ந்த கருத்தாகும். இந்தக் கருத்திற்கு எந்தக் கொள்கை அல்லது செயல் வேறுபடுகிறதோ, அது ஜனநாயகமல்ல.

பிறகு கட்டியக்காரன் இளவரசனைப் போய்ப் பார்த்தான். ''வேந்தரே! தங்கள் அன்னை, மகாராணியார், குடும்ப சமேதராய் தாங்கள் உடனே எகிப்திற்கு வந்து ராஜரீகத்தை ஏற்க வேண்டுமெனச் சொல்லிவருமாறு என்னை ஏவினார்கள். அந்தக் கட்டளையை நிறைவேற்றி, நம் தேசத்திற்குத் தங்கள் இருவரையும் அழைத்துச்செல்லவே நான் வந்தேன். வருக, வருக'' என்றான்.

மாப்பிள்ளை, மாமனாரைப் போய் சந்தித்தான். ''மாமா! நான் என் தேசத்திற்கு உடனே செல்லவேண்டும். விடை தருக'' என்றான். ''ஆகா! அப்படியே ஆகுக!'' என்று பதில் கூறினான் அரசன். தன் மாப்பிள்ளை, தன்னைக் காட்டிலும் ஒருபெரிய பலம்பொருந்திய தேசத்தின் சக்ரவர்த்தி என்பதைஅறிந்து, மனத்துள் பேரானந்தம்

அடைந்தான். அரசன் உத்தரவு பிறந்தது. ஒரு பெரிய, புதிய, அழகிய கப்பல் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் ஏராளமான பொன்னும் மணியும், ஆபரணங்களும் வைத்து, மகளையும் மாப்பிள்ளையையும், கப்பலேற்றி, சந்தோஷமாய் எகிப்திற்கு வழியனுப்பினன்.

கப்பல் எகிப்திற்குப் போய்ச் சேர்ந்தது. ராணியும் அங்குள்ள மக்களும் திரண்டு வந்து, புதிய தம்பதிகளை வரவேற்ருர்கள். ராணி கணவன் செத்த கவலையைக் கூடப் பாராட்டாது, அருமை மகனைக் குதூகலத்துடன் வரவேற்க, தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்தாள். மகனையும் மருகியையும் வரவேற்று, அரண்மனையில் இருக்கச் செய்தாள். பட்டாபிஷேகம் விமரிசையாய் நடந்தது. இளவரசன், எகிப்தின் சக்ரவர்த்தியானன். நாட்டில் எங்கும் குதூகலம். மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். நீதி தழைத்து, பழைய கொடுங்கோன்மை மாறி புதிய யுகம் பிறந்துவிட்டது என்று மக்கள் நினைத்தார்கள். அது உண்மைதான். இவ்வரசன் ஆட்சியில் ஏழைகளுக்கு உணவு, உடைப்பஞ்சம் நீங்கியது. சாதிமத பேதம் நீங்கி, மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். மக்களின் குறைகளை அரசனே நேரில் போய்ப் பார்த்து, அவ்வப்போது நீதி வழங்கினன். ஏழை பணக்காரன் என்றவித்தியாசம் இல்லாமல் அவன் அரசாண்டான். நாட்டில் எங்கும் அமைதியும், இன்பமும் குடிகொண்டிருந்தன.

அந்த இன்பத்திற்கு ஒரு சிதைவு உண்டாயிற்று. ஒரு நாள் தன் எஜமானிடம் கடைசிவரையில் உண்மையுடன் வேலைபார்த்துக் கொண்டு வந்த அராபியன் வந்தான். தான் சொந்த ஊருக்குத் திரும்பிப் போக வேணுமென்றும், தனக்கு ஊருக்குப்போக அனுமதி தரும்படியும் எஜமானை மன்ருடிக் கேட்டான்.

வேலைக்காரன் கூறியதைக் கேட்ட அரசன், அவனைப் பிரிய மனம் ஏங்கினன். "அப்பா, வேலைக்காரா! நீ என்னைப் பிரிந்தா போகப்போகிருய்? உண்மைதான? சொல்" என்ருன். "ஆம் உண்மைதான்" என்று தலை அசைத்தான், வேலைக்காரன். "அரசனே! என் அன்புள்ள எஜமானே! தங்களைப் பிரிய, சிறிதும் எனக்கு மனம் வரவில்லை. அந்தோ, நான் என்ன செய்வேன்! என்னை ஒருவன் அழைக்கிருன். அழைப்பு வந்துவிட்டது. ஆம் திரும்பாத அழைப்புத்தான். அந்த அழைப்பை மறுக்க என்னல் முடியவில்லையே. என்ன செய்வேன்" என்ருன் அராபிய வேலைக்காரன்.

இதைக் கேட்ட அரசனுக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. வாய் பேச முடியவில்லை. உயிரினும் அரிய வேலைக்காரனை, விட்டுப் பிரிவது என்ருல் எளிதான காரியமா? இந்தப் பிரிவாற்ருமையே அரசனின் துக்கத்துக்குக் காரணம்.

அரசன், வேலைக்காரனை அருகில் அழைத்தான். மார்போடு கட்டித் தழுவிக்கொண்டான். "நண்பா! நீ எனக்கு வெறும் வேலைக்காரனுகமட்டுமா இருந்துவந்தாய்? இல்லை, இல்லை. நீஎல்லாவற்றிற்கும் மேலானவன். தாயையும் தந்தையையும நான் பிரிந்தி

ருந்த போதெல்லாம் நீதான் எனக்குத் தாயும் தந்தையுமாய் ஆறுதல் அளித்தாய் உன்னால்தான் கவலை எல்லாம் மறந்திருந்தேன். நீ இப்போது பிரிந்து செல்லவேணுமென்று கேட்கின்றாய். உன்னுடைய இந்தச் சிறிய வேண்டுகோளைக்கூட நான் நிறைவேற்றி வைக்காவிட்டால், நான் எவ்வாறு நன்றி உள்ளவன் ஆவேன். நீ எனக்கு இதுவரை செய்து வந்திருக்கும் சேவைக்கு, என்னையே நான் கொடுத்தாலும் கூட அதற்கு ஈடாகுமா? என்னிடம் உள்ள எல்லாச் செல்வமும் உன்னுடையதுதான். நான் சொல்வது உண்மை. இதை நம்பு. நீ என்ன நினைத்தாலும் சரி. நீ இல்லாவிட், டால் நான் வெகு காலத்திற்கு முன்னே இறந்துபோயிருப்பேன். இது உண்மையல்லவா?'' என்று கண்ணீர் விட்டுக்கொண்டு தழுதழுத்த குரலில் கூறினான் அரசன்.

அதற்கு, அந்த அராபிய வேலைக்காரன், "அரசரே! இல்லை, இல்லை. தாங்கள் இல்லாவிட்டால், நான் வெகுகாலத்திற்கு முன்பே இறந்துபோயிருப்பேன். தாங்கள் நடுக்கடலில் மனமிரங்கி உயிர்ப்பிச்சை அளித்த தங்கமீன் நான்தான்! தெரிகிறதா?'' என்று சொல்லி மாயமாய் மறைந்தான்.

⊕

சின்ன விஷயம்

போலீஸ்காரர்களுக்குப் பயந்து ஒரு வேலை செய்யாமலிருப்பது போதாது. தெருவிலும், வாய்க்கால் ஓரத்திலும், ஜனங்கள் நடமாடும் வேறு பொது இடங்களிலும் மலஜலம் கழிப்பது அநாகரிகம். ஊரைக் கெடுக்கிறது நமக்கும் நல்லதல்ல. யார் இருந்தாலும் இல்லாதிருந்தாலும், செய்யாமல் இருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகள் கண்ட இடத்தில் அசுத்தம் செய்தால் சும்மா இருப்போமா? ஊரெல்லாம் ஒரு வீடு. நாம் அதில் குழந்தைகள் அல்லவா? 'வீடுதான் நம்முடையது, ஊர் யாருடையதோ தெரியாது' என்றிருப்பது அநாகரிகம்.

— 'ராஜாஜி'.

நாலாவது பிரயாணம்

கடலோடியின் கதை

அனில் அண்ணன்

என்னைப் பற்றிய கதைகளை கப்பித்தானிடம் சொல்லி முடித்தேன். கப்பித்தான் என்னை மதிக்கவேண்டும் அல்லவா? என்னுடைய மூட்டைகளை அவிழ்த்தேன். அதிலிருந்து விலை உயர்ந்த நகை ஒன்றை எடுத்தேன். கப்பித்தானிடம் கொடுத்தேன்.

கப்பித்தான் நான் அப்படிக் கொடுத்ததை விரும்பவில்லை. வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டான். உடனே 'கடலோடியே நான் ஒரு உதவி செய்தால் அதற்குக் கூலி வாங்கும் வழக்கம் என்னிடம் இல்லை. உனக்கு மட்டும் தானா உதவி செய்தேன்? கடலிலே எத்தனையோ கப்பல்கள் உடைந்தன. எத்தனையோ பேர்களை நான் காப்பாற்றி இருக்கிறேன். அவர்களை அவர்களின் சொந்த ஊரில் கொண்டுபோய் விட்டிருக்கிறேன். ஆண்டவன் அருளால் அவர்கள் அத்தனை பேருக்கும் உண்டி கொடுத்தேன், உடைகொடுத்தேன். அதுமட்டுமா? வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்தேன். மனிதன் மனிதனுடன் மனிதன் மாதிரியேதான் நடக்கவேண்டும்' என்றான் கப்பித்தான்.

நானும் உடனே கப்பித்தானை வாழ்த்தினேன். கப்பல் புறப்பட்டது.

காற்று நன்றாக இருந்தது. கடல் அமைதியாக இருந்தது பிரயாணம் சுகமாக இருந்தது. கப்பலும் போய்க்கொண்டிருக்கிறது. என் மனமும் நான் பிரயாணத்தில் பட்ட கஷ்டங்களையும் அனுபவித்த அபாயங்களையும் நினைத்துக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் கனவா? என்னையும் என் மனைவியின் சடலத்தையும் பாதாளத்தில் இறக்கினார்களே: அதை நினைக்கும் போது நான் அரைப் பயித்தியம் ஆகிவிடுவேன்.

தொடர்கதை

கடைசியாக கடவுள் கருணையால் கப்பலும் பாஸ்ராக் கரையை அடைந்தது. சில நாட்

களில் ஆற்று மார்க்கமாக பாக்தாதுக்கு வந்து விட்டேன். உடனே விறுவிறென்று வீட்டை அடைந்தேன். நான் கொண்டு வந்த விலைமதிக்க முடியாத பொருள்களையும் என்னையும் என் நண்பர்கள், பெண்டு பிள்ளைகள், சுற்றத்தார்கள் எல்லோரும் கண்டனர். நான் பத்திரமாகத் திரும்பி வந்ததை அறிந்து அனை வரும் ஆனந்தம் அடைந்தனர்.

நான் கொண்டுவந்த செல்வத்தில் வறியாருக்கும்; அனாதை களுக்கும், வாரி வழங்கினேன். நண்பர்களுக்கும், சுற்றத்தார் களுக்கும் அரிய பொருள்களைப் பரிசளித்தேன். மீதமுள்ளவை களைப் பத்திரமாகப் பூட்டிவைத்தேன். சுகபோகத்துடன் நண் பர்கள் புடைசூழ வாழ்ந்து வந்தேன்.

நண்பர்களே, நாளைக்குச் சொல்லப்போகும் 'ஐந்தாவது பிர யாணம்' இருக்கிறதே அது அபாரம். அதை நினைக்கும்போது



இப்போது சொல்லியது ஒரு கடுகுமாத்திரமே, என்றான் கட லோடி. சொல்லி முடித்ததும் மூட்டை தூக்கிக்கு நூறு தங்க நாணயங்களைக் கொடுத்தான் கடலோடி. 'மூட்டை தூக்கியே நாளைக்கு அவசியம் இன்று வந்த நண்பர்களுடன் வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். பிறகு எல்லோரும் ஆனந்தமாகச் சாப்பிட்டனர். சாப்பாடு ஆனதும் அத்தனைபேரும் அவர்களின் வீட்டுக்குப் போய்விட்டனர்.

மூட்டை தூக்கி சின்பாது தன்னுடைய வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தான். இரவெல்லாம் கடலோடி சொன்ன கதையை நினைத்துக்கொண்டே படுத்திருந்தான். விடியற்காலையில் எழுந் தான். கடலோடி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மூட்டை தூக்கி கடலோடி வீட்டிற்கு வரும்வரையில் பிணக் குழியில் கட லோடி பட்ட கஷ்டத்தை எண்ணிக்கொண்டே இருந்தான். சமக் காளம் விரிக்கப்பட்டது. சாப்பாடு பரிமாறப்பட்டது. பரி மாறும்வரை நிசப்தமாக இருந்தார்கள். கடலோடி கதை சொல்ல ஆரம்பித்தான்.

ஐந்தாவது பிரயாணம்

நண்பர்களே, மூட்டை தூக்கியே, எனது நாலாவது பிரயாணத்திற்குப் பிறகு ரொம்பவும் சுக செளகரியங்களுடன் வாழ்ந்தேன். பட்ட கஷ்டங்களையும், அவதிகளையும், அபாயங்களையும் மறந்தேன். பணம் ஒன்றே தான்குறியாக இருந்தேன். இத்தனை அபாயங்களிலும் நிறையச் செல்வம் கிடைத்தது. ஒன்றே தான் ஞாபகத்திலிருந்தது. நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? பணத்தாசையே என் மனத்தை ஆ[illegible]யது. உடனே மற்ற வியாபாரிகளுடன் பிரயாணத்திற்கு ஆயத்தமானேன்.

நல்லவிலைக்கு விற்கக் கூடிய வியாபாரப் பொருள்களைப் பார்த்து வாங்கினேன். மூட்டைகளாகக் கட்டினேன். ஆற்று மார்க்கமாக விற்பனைச் சரக்குகளுள்பட பாஸ்ராவுக்குப்புறப்பட்டேன். பாஸ்ராவை அடைந்தேன். கடலோரத்துக்குப்போனேன். கரையிலே ஒரு பெரிய கப்பல்—புதிய கப்பல் ஒன்று மிதந்துகொண்டிருந்தது. அந்தக் கப்பலை விலைக்கு வாங்கினேன். கப்பித்தான் ஒருவனை கப்பலோட்ட அமர்த்தினேன். கப்பலிலே

சரக்குகளை எற்றினேன். வேலைக்காரர் சிலரையும் வேலைக்கு அமர்த்தினேன். கப்பலிலே எனக்கு உதவி செய்வதற்காகத் தான் அவர்களும் கப்பல் எறினார்கள். கடைசியாக சில வியாபாரிகளையும் பிரயாணிகளாக எற்றிக்கொண்டேன். அவர்கள் கட்டணத்தை உடனே ரொக்கமாகத் தந்துவிட்டார்கள். இப்பொழுது கப்பலின் சொந்தக்காரன் நான்தானே. எனக்குத் தெரிந்த கடல் அனுபவங்களால் நானும் கப்பித்தானுக்கு உதவி செய்யக்கூடும் என்று எண்ணினேன்.

பாஸ்ராவை விட்டுக் கப்பல் புறப்பட்டது. காற்று நன்றாக இருந்தது. கடலும் அமைதியாக இருந்தது. தீவு தீவாக இறங்கினோம். அங்கங்கே எங்கள் பொருள்களை விற்றோம். அங்குள்ள பொருள்களை மலிவான விலைக்கு வாங்கினோம். அப்படியே வரும்பொழுது ஜனநடமாட்ட மில்லாத ஒரு தீவுக்கு வந்தோம். அங்கே ஒரு முட்டை வடிவமான ஒரே ஒரு கட்டிடத்தைக் கண்டோம். அது ஒரு பெரிய ராஜாளிப் பறவையின் முட்டை என்பதை அறிந்தேன். நான் அறிந்ததை என் நண்பர்களிடம் சொல்லவில்லை. ஆதலால் அவர்கள் கரையில் இறங்கி முட்டையின் அருகே போனார்கள். வேறு வேலை இல்லாததால், பெரிய கற்களால் அந்த முட்டையில் அடித்தார்கள். ஒரு பகுதியில் முட்டை உடைந்தது. உடைந்த பக்கத்திலிருந்து நீர் மாதிரி வெளியே வந்தது, அத்துடனே ஒரு காலும வெளியே நீட்டிக் கொண்டு வந்தது. எனது நண்பர்களும் மேலும் தங்களுடைய கைங்கரியத்தை நடத்தினர். முட்டைக்குள்ளிருந்த குஞ்சைக் கொன்று துண்டு துண்டாக்கி விட்டனர். அவர்கள் செய்த அருங்காரியத்தை என்னிடம் சொல்வதற்காகக் கப்பலில் எறினார்கள். அவர்களுடைய பராக்கிரமத்தை என்னிடம் சொன்னார்கள்.

நினைவு நாட்கள்

மகாத்மா காந்தி	...	ஜனவரி	30
மோதிலால் நேரு	...	பிப்ரவரி	6
கோபாலகிருஷ்ண கோகலே	...	பிப்ரவரி	19
கஸ்தூரிபா காந்தி	...	பிப்ரவரி	22
சரோஜினி தேவி	...	மார்ச்சு	2
சி. எப். ஆண்ட்ரூஸ்	...	எப்ரல்	5
டாக்டர் அன்சாரி	...	மே	10
சித்தரஞ்சன்தாஸ்	...	ஜூன்	16
தாதாபாய் நௌரோஜி	...	ஜூன்	30
லோகமான்யா திலகர்	...	ஆகஸ்ட்	1
ரவீந்திரநாத் தாகூர்	...	ஆகஸ்ட்	7
மகாதேவ தேசாய்	...	ஆகஸ்ட்	15
மகாகவி பாரதியார்	...	நவம்பர்	11
பண்டித் மாளவியா	...	நவம்பர்	12
வ. உ. சிதம்பரம் பிள்ளை	...	நவம்பர்	18

எனக்கோ பயமானபயம். உடனே கத்தினேன். 'ஐயோ, நாம் தொலைந்தோம். என்ன காரியம் செய்தீர்கள். ராஜாளிக் குஞ்சின் அப்பா ராஜாளியும், அம்மா ராஜாளியும் இதை அறிந்தால் நம்மை அடியோடு ஒழித்துவிடுமே. நாம் இந்த இடத்திலிருந்து உடனே தப்பிக்கவேண்டும் என்றேன். கப்பலை நடுக்கடலுக்கு விடும்படி உத்திரவிட்டேன்.

கப்பலை வேகமாக விட்டோம். கப்பல் போகிறது. வியாபாரிகள் ராஜாளிக் குஞ்சின் மாமிசத்தைச் சமைக்கத் தொடங்

கினர். சமையல் ஆனதும் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தார்களோ இல்லையோ எங்கள் கப்பலுக்கு மேலே இரண்டு கரிய மேகங்களைக் கண்டோம். கிட்டக் கிட்ட அவைகள் வந்தன. இரண்டு பெரிய—மகாப் பெரிய ராஜாளிகள் சிறகுகளை அடித்துக் கொண்டு அண்டங்கலங்க பேரிடிபோல சத்தமிட்டுக்கொண்டு வந்து விட்டன. கிட்டத்தில் வந்துவிட்டன. தலைக்குமேலே வந்துவிட்டன, இரண்டு கால்களுக்கும் நடுவே எங்கள் கப்பல்

களைக் காட்டிலும் பெரிதான மலைகளை வைத்திருந்ததைப் பார்த்து விட்டோம்.

'சரி, எங்களைப் பழிவாங்கத்தான் இந்த மலைபோன்ற பறவைகள் மலைகளைக் கௌவிக்கொண்டு வருகின்றன' என்பதை உணர்ந்தோம். உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையை விட்டோம். பறந்து வந்த பறவைகளில் ஒன்று கால் இடுக்கில் வைத்திருந்த மலையை நழுவவிட்டது. மலை கப்பலில் விழப்போகிறது. கப்பித்தான் சட்டென்று சுக்கானைத் திருப்பினார். கப்பல் வேறு திசை மாறியது. குறிகாணியும் கடலில் 'தொபீல்' என்று விழுந்தது. கடல் குமுறியது. கொந்தளித்தது. கப்பல் தத்தளிக்கிறது. கொஞ்ச நேரத்தில் கடல் அமைதியானது. கப்பலும் ஒருவாறு தன் நிலைக்கு வந்தது. ஓ அபாயம்...அபாயம்...மறுபடியும் அபாயம்...மற்றொரு ராஜாளியும் எங்களுக்கு கப்பலுக்கு நேரே உயரத்திலிருந்து மலையை நழுவவிட்டது. கப்பலின் பின்புறத்தில் விழுந்தது மலை. கப்பலின் பின்புறம் இருபது துண்டுகளாக உடைந்து பாதிக் கப்பல் கடலிலே மூழ்கிவிட்டது. உயிரோடு இருந்த பாக்கிப்பேர்கள் கடலிலே குதித்தோம். அலை எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. நான் உயிர் பிழைப்பதற்காக அலையோடு மோதி கடலின் மேல்பரப்புக்கு வந்துவிட்டேன். நல்லவேளையாக உடைந்த கப்பலின் கட்டையொன்றைக் கைப்பிடித்தேன். அந்தக் கட்டையிலே உட்கார்ந்தேன். கால்களால் தண்ணீரைத் தப்பினேன். காற்றடித்த பக்கம் கட்டைபோனது. கட்டை கரையைக் கண்டது. அது ஒரு தீவு. அந்தத் தீவை அடைந்தேன். என்னைப் படைத்த ஆண்டவனிடமே என்னுடைய பசி, தாகம், எல்லாம் ஒப்படைத்தேன். பயங்கரத்தால் என் உயிர் போய்விடுமோ என்று எண்ணினேன். கடற்கரையிலே காலை நீட்டிக் கொண்டு அப்பாடா என்று படுத்தேன். இளைப்பாறினேன். சற்றுநேரத்தில் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பலம் வந்தது. உயிர் வந்தது எழுந்தேன். அந்தத் தீவைச் சுற்றிப் பார்த்தேன். கொஞ்ச தூரம்தான் போயிருப்பேன். என் விதியானது ஒரு மோட்சத் தோட்டத்தில் கொண்டுபோய் என்னைவிட்டது அந்தத் தோட்டத்திலே எங்கு பார்த்தாலும் பழமரங்கள். அத்தனை பழங்களும் சுவர்ணமயமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான அழகான பறவைகள். தரையெல்லாம் பூக்கள் ரத்தினம் கம்பளம் விரித்ததுபோலக் கிடந்தன. நீரருவி வேறு அழகாக ஓடிக்கொண்டிருக்கிறது.

உடனே பழங்களைத் தின்றேன். தண்ணீரைக் குடித்தேன். பூக்களை முகர்ந்து அலுப்பாறினேன்.

உங்கள் புத்தகம்

உங்களுக்காக ஸ்ரீ. அழ. வள்ளியப்பா, ஒரு சிறு கதைப் பாட்டுப் புத்தகம் தயாரித்திருக்கிறார். அத்தனை கதைகளும் ஈசாப்பின் கதைகள். புத்தகத்தை படங்கள் அலங்கரிக்கின்றன. விலை. 2 அணா. வெளியிட்டவர்கள்: குழந்தைப் பதிப்பகம், சென்னை. 6.



உலக மாதா

'அண்ணன்'

'ஏண்டா கோபு சாப்பிட உட்கார்ந்தா வேகமாக கை நிறைய சோற்றை அள்ளித் தின்னாமல் ரண்டு ரண்டு பருக்கையா தின்றுகொண்டிருக்கிறாயே. சீக்கிரம் சோற்றைக் கைநிறைய அள்ளிச் சாப்பிடு' என்றாள் அம்மா.

'என்னாலே சாப்பிட முடியவில்லை அம்மா. வாயெல்லாம் வெந்துபோன புண் மாதிரி இருக்கம்மா. உரைப்பு, உப்பு, பட்டால் போதும். ஒரே எரிச்சலா இருக்கு. சாப்பிட முடியவில்லை அம்மா' என்றான் கோபு. கோபு இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது பாட்டி வந்துவிட்டாள்.

'என்னடி, குழந்தையை கோபிச்சுக்கிறே. அதுக்கு ரண்டு வாரமா எண்ணெய் தேச்சுவிடலே. உடம்பெல்லாம் ஒரே உஷ்ணமாயிருக்கு. சாப்பிட்ட சாதம் செரிக்கலெ, அதான் வாயெல்லாம் புண்ணாக இருக்கு. சரி கொஞசம் வெங்காயம், உப்பிட்ட எலுமிச்சங்காய் ஊறுகாய் போட்டு தயிர் சாதம் பிசைஞ்சுவை. இப்ப சாப்பிடட்டும். நாளைக்கு காலையிலே புழக்கடையிலே முளைச்சுக் கிடக்கிற அந்த மணத்தக்காளி இலையைக் கொஞ்சம் பறித்துக் கொடுத்து மெல்லச் சொல்லு. பகல் சாப்பாட்டுக்கும் மணத்தக்காளி இலையை, பொரிச்ச குழம்பு வைத்துச் சாப்பிடச் சொல்லு. பொரிச்ச குழம்பிலே கொஞ்சம் தேங்காய் பாலும் விட்டுக் கொடுத்திடு. அப்புறம் பாரு குழந்தையை. வேக்காடு எல்லாம் காற்றாய் பறக்கும்' என்றாள் பாட்டி.

வெங்காயம், எலுமிச்சை ஊறுகாய் போட்டு, தயிர் சாதம் பிசைந்து கொடுத்தாள் அம்மா. கோபுவும் நன்ருய்ச் சாப்பிட்டான். அடுத்த நாள காலையில் புழக்கடையில் முளைத்துக் கிடந்த மணத்தக்காளி இலையை மென்ருன். பகலிலே மணத்தக்காளி பொரிச்ச குழம்பு மணமாக இருந்தது. வேண்டிய மட்டும் தின்ருன். இப்பொழுது அவனுக்கு வாய்ப் புண் கிடையாது.

மணத்தக்காளிக் கீரைக்கு அத்தனை மகிமையா என்றுதானே கேட்கிறீர்கள்?

மணத்தக்காளி மகிமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

மணத்தக்காளியை உலக மாதா, மணத்தக்காளி, குட்டைத் தக்காளி, என்றும் சொல்லுவார்கள். தெலுங்கிலே காமாஞ்சி செட்டு, மலையாளத்தில் மணித்தக்காளி என்றும், கன்னடத்தில் காகமுஞ்சி என்றும், ஹிந்தியில் மாகோ என்றும் சொல்வார்கள்.

மணத்தக்காளி இலையை மட்டும்தான் சாப்பிடுகிருர்களென்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. மணத்தக்காளிக் காய், மணத்தக்காளி வத்தலையும் உணவுப்பண்டமாகச் சமைத்துச் சாப்பிடுவதுண்டு. மணத் தக்காளி வத்தல் ரசம் ரொம்ப ருசியாக இருக்கும். அப்பப்பா என்ன ருசி.

முட்டைக் கோஸுக்கீரை சாப்பிடுகிருேமல்லவா? 'முட்டைக் கோஸ் உடம்புக்கு நல்லது, சத்து அதிகமிருக்கிறது' என்று சொல்லுகிருர்கள். ஆதலால் நாம் முட்டைக் கோஸுக் கீரையை அதிக விலைகொடுத்து வாங்குகிருேம். மணத்தக்காளிக் கீரை நமது வீட்டுப் புழக்கடைக் கீரைதானே! அதிலே என்ன சத்து இருக்கிறது? காசு கொடுத்தா வாங்குகிருேம்? சொல்லட்டுமா அதன் சத்துப் பொருளை? அதிலே முட்டைக் கோஸைக்காட்டிலும் உயிர் சத்து நாலு மடங்கு அதிகம் இருக்கிறது. கொழுப்பு சத்து 10 மடங்கு இருக்கிறது. தாதுப் பொருள் 4 மடங்கு, கார்போ ஹைட்ரேட் ஒன்றரை மடங்கு, கால்சியம் 12 மடங்கு, பாஸ்பரஸ் ஒன்றரை மடங்கு இரும்புச்சத்து 26 மடங்கும் இருக்கிறது. முட்டைக்கோஸில் 'சி' வைட்மின் அதிகம் இருக்கிறது. மணத்தக்காளியில் குறைவாகத்தான் இருக்கிறது. எப்படி இருந்தாலும் நமது புழக்கடைக் கீரையான மணத்தக்காளிதான் நல்ல கீரை.

மணத்தக்காளிக் கீரையை வாரம் ஒருமுறை சாப்பிடுங்கள். மணத்தக்காளியின் மகிமையை இன்னும் நன்ருகத் தெரிந்து கொள்வீர்கள். உங்கள் வீட்டுப் புழககடையில் மணத்தக்காளிச் செடி இருக்கிறதா? இல்லையானுல் பயிரிடுங்கள்.

நீதிக்கதைகள்

ஈசோப்

மனிதனும் சிங்கமும்

சிங்கம் ஒன்று கூண்டில் அடைபட்டுக் கிடந்தது. அதற்குத் தீனி போடப் போனான், ஒரு மனிதன். அப்போது இருவரும் பேசிக் கொண்டார்கள். சிங்கத்தைப் பார்த்து மனிதன் சொன்னான், "ஏ சிங்கமே, சிங்கமே! அதோ பார், அந்தச் சிலையை. அதில் ஒரு சிங்கத்தின் மேல், மனிதன் ஒருவன் ஏறி சவ்வாரி செய்வதைப் பார்த்தாயா? மிருகங்களைக் காட்டிலும், மனிதனே தைரியசாலி, சிறந்தவன்" என்றான்.

இதைக் கேட்ட சிங்கம் சிரித்தது. "ஏ மனிதனே! மனிதனே! நீ மனித ஜாதி உயர்வு என்று சொல்லுகிறாய். நான் அதைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் அந்தச் சிலையைச் செய்தவன், ஒரு மனிதன். அதனால்தான், சிங்கத்தின் மேல் மனிதன் குதிரையேறிச் சவ்வாரி செய்வது போல், சித்திரித்திருக்கிறான். அந்தச் சிலையை ஒரு சிங்கம் செய்திருந்தால், எப்படிச் செய்திருக்கும் தெரியுமா? மனிதனைக் கீழே தள்ளி, அவன்மேல் சிங்கம் சவ்வாரி செய்வது போல் அல்லவா அதை உருவாக்கியிருக்கும்?" என்றது சிங்கம்.

அதனால் படைப்பில் ஒவ்வொன்றும் சிறப்புடையதே.

140 - வயது மனிதன்

ருஷ்யா தேசத்தில் ஆஜர்பெய்ஜான் மாகாணத்தில் பெரசுரா என்ற சிறு கிராமம் ஒன்றிருக்கிறது. அங்கே 140 வயதுள்ள ஒரு மனிதன் இன்னும் வசித்து வருகிறான். திட சரீரத்துடன் இருக்கிறான். நன்றாக ஆகாரம் சாப்பிடுகிறான். ஊக்கமாக களைக்காமல் வயல் வேலை பார்க்கிறான். நடக்கிறான். ஓடுகிறான். கண் பார்வை மங்கவில்லை. பற்கள் சோவி போல் ஆடாமல் உறுதியாய் இருக்கின்றன. இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், அவனுக்கு 117 வயதுள்ள மனைவியும், பிள்ளைகள், பேரன் பேத்திகள் கொள்ளுப் பேரன் பேத்திகள்—இப்படியாக 118 பேர்கள் இன்னும் ஏக குடும்பமாய், சந்தோஷமாய் வாழ்ந்து வருகிறார்கள்.

பாம்பும் குடியானவனும்

ஒரு கிராமம். அங்கே ஒரு குடியானவன் இருந்தான். அவன் வயலுக்கு ஒரு நாள் போனான். போகும் வழியில் பெரிய புளிய மரம் ஒன்றிருந்தது. அதில் ஒரு பெரிய பொந்து. அந்தப் பொந்தில் ஒரு கருநாகம். அது குளிராலும் பனியாலும் வாடிச் சுருண்டு கிடந்தது. அதைப் பார்த்தான் குடியானவன். "ஐயோ பாவம்! இந்தப் பாம்பு, இப்படிக் குளிரால் வாடுகிறதே. இதைக் காப்பாற்றுவோம்" என்று இரக்கப்பட்டான்.

அந்தப் பாம்பை தன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்தான். அடுப்பில் கணப்பேற்றினான். அதன் பக்கத்தில் அந்தப் பாம்பை போட்டான். கொஞ்சம் சூடு உண்டாயிற்று. பாம்புக்கு சேட்டை வந்தது. தலையைத் தூக்கியது. "உஸ்...ஸ்" என்று படம் எடுத்துச் சீறியது. அருகில் இருந்த குடியானவன் மனைவி மக்களின் மேல் அவர்களைக் கடிப்பதற்காகத் துள்ளி விழுந்தது. அவர்கள் அலறி அடித்துக் கொண்டு அப்பால் ஓடினர். "பாம்பு. பாம்பு" என்று கூச்சலிட்டனர். இதையறிந்தான் குடியானவன், கோபம் கொண்டான். உருவினான் கத்தியை. "நன்றிகெட்ட நாகமே" என்று, அதை இரு துண்டாக வெட்டினான். கொன்றான் பாம்பை.

செய்நன்றி கொன்றவர்களுக்கு ஒரு போதும் உய்வில்லை.

இரண்டு பெண்டாட்டிக்காரன்

ஒருவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவன் வயதானவன். ஆனால் தொண்டு கிழவன் அல்ல. அவன் தலை மயிர் நாளுக்கு நாள் நரைத்துக் கொண்டே வந்தது. அவனைக் காட்டிலும் கொஞ்சம் வயதானவள், அவன் மூத்த சம்சாரம். இளையவள், அழகாய் இருப்பாள். எப்போதும் இளமையின் குதூகலம் அவளிடம் நிறைந்திருக்கும்.

'வயதான கிழவனை புருஷனாய் கட்டிக் கொண்டிருக்கிறாள்' என்று பிறர் தன்னை கேலி செய்யாமல் இருக்கவேண்டும் என்று நினைத்தாள், இளைய மனைவி. அதற்கு ஒரு வழி செய்தாள். வெள்ளி போல் முளைத்திருந்த தன் புருஷன் தலையிலுள்ள, நரை மயிர் ஒன்றைக்கூட விடாமல் பிடுங்கிவிட்டாள். புருஷனின்

தம்பிரான்:— டேய் ஜம்பு லிங்கம்! ஏன் ரொம்ப இளைத்துப் போயிருக்கிறாய்?

பையன் :— ஐயா தொங்கிலிங்கத் தம்பிரானே, நான் தாய்ப் பாலில்லாமல் வளர்ந்தவன். அத்துடன் இது ரேஷன் காலம். பாலும் பழமும் தங்கள் ஆதீனத்தில் அகப்பட்ட பின்பு ஏழைகளாகிய நாங்கள் இளைக்காமல் என்ன செய்வது?



தலை பாதி மொட்டை ஆயிற்று. அவன் தலையில் நாலைந்து கறுப்பு மயிர்தான் பாக்கி.

இதைப் பார்த்தாள் மூத்தமனைவி. அவள், தன்னை கிழவி என்று பிறர் நினைக்காமலும், புருஷனைக்காட்டிலும் வயதானவள் என்று பிறர் கேலிசெய்யாமலும் இருக்க, ஒரு உபாயம்செய்தாள். தன் புருஷன் தலையில் பாக்கியிருந்த கறுப்பு மயிர் எல்லாவற்றை

அமெரிக்காவில் இந்திய மாணவர்கள்



கீழ்க் கோடி நாடுகளில் இருந்து 25 ஹைஸ்கூல் மாணவர்கள்' அமெரிக்காவில் பல ஹைஸ்கூல்களைச் சுற்றிப் பார்த்துவர, சென்ற மாதம் சென்றிருக்கிறார்கள். இந்திய மாணவர்கள் பிரதிநிதிகளாகிய திருவனந்தபுரம், பாலகிருஷ்ண நாயரும், லக்ஷ்மணபுரி உஷாராயும் சென்றுள்ளனர். இது, வாஷிங்டன் நகராட்சி மண்டபத்தில் எல்லா மாணவர்களும் இருந்து எடுத்த படம்.

யும் ஒவ்வொன்ருக நாளடைவில் பிடுங்கி விட்டாள். இரண்டிற்கும் பொதுவில், புருஷன் தலை மொட்டையாயிற்று.

ஒரு மனிதன் ஏக காலத்தில் இரண்டு கட்சிகளையும் சார்ந்திருந்து திருப்திசெய்ய முடியாது.

காற்றில் பறந்தது!

ஒரு கனவான் இருந்தார். வயதானவர். வழுக்கைத் தலையர். தன்னை இளைஞன் என்று பிறர் மதிக்க வேணுமென நினைத்தார். தன் வழுக்கையை மறைக்க, ரோமத்தால் செய்த தலைமூடி ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டு, வெளியில் உலாவச் சென்ருர்; அப்போது பெரும் சூருவளிக் காற்று அடித்தது. தலை மூடியை பார்த்த, அவர் நண்பர்கள் எல்லாரும் கடகடவென்று சிரித்தார்கள். கேலி செய்தார்கள். அதற்காக கிழவர் சளைக்கவில்லை. சிரிப்பவர்களைப் பார்த்து, தானும் சிரித்தார். விடாமல் சிரித்தார். குலுங்கக் குலுங்கச் சிரித்தார். "மூட நண்பர்களே! என் உடலில் ஒட்டிய ரோமமே என் தலையில் தங்காதிருக்கும்போது, பிறரிடம் இரவல் வாங்கிய ரோமமா என் தலையில் தங்கும்?" என்று சொல்லி நகைத்தார்.எல்லாரும் சிரித்தார்கள்!

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது.

தவளையும் எருதும்

ஒரு பாசி படர்ந்த குளம். அதில் தண்ணீர் அதிகமில்லை. முழங்கால் மட்டுமே இருந்தது. தவளைகள் ஏராளமாய் அந்தக் குட்டையில் வசித்து வந்தன.

அந்தக் குளத்தின் கரையோரத்தில் ஒருநாள் இரண்டு எருதுகள், ஒன்ருேடு ஒன்று முட்டி மோதி சண்டையிட்டுக்கொண்டு நின்றன. இந்த எருதுகளின் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்தது, ஒரு தவளை. அது மற்ருெரு தவளையிடம், "அண்ணே அண்ணே! இந்த எருதுகள் இப்படி உக்கிரமாய் சண்டைப் போடுவதைப் பார்த்தால், நம்கள் கதி என்ன ஆகுமோ, தெரியவில்லையே. பயமாய் இருக்கிறது" என்றது. அதைக் கேட்ட அண்ணன் தவளை, "தம்பி, தம்பி! உனக்கேன் அந்தக் கவலை. மாட்டு மந்தையில் தலைவன் ஆவதற்காக, ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொள்ளுகின்றன. நீ பயப்படாதே" என்றது. இதைக் கேட்ட தம்பித் தவளை, "அண்ணே, அண்ணே! நீ உண்மையைச் சொன்ணுய். என் பயம் உறுதியாயிற்று. சண்டைப்போடும் எருதுகளில், தோற்றது இந்த குட்டையில் வந்து விழுந்து ஒளிந்து கொள்ளும். அப்போது நமது அண்ணன் தம்பி, தங்கைகளில் பலர் நசுக்கிச் செத்துப்போவார்களே" என்று வருந்தியது.

முடிவில் என்ன நடந்தது தெரியுமா? தோற்றுப்போன எருது, பயந்து ஓடிவந்து அந்தக் குட்டையில் விழுந்தது. பல தவளைகளை, மிதித்து நசுக்கிக் கொன்றுவிட்டது.

ஆனை வரும் பின்னே, மணிஓசை வரும் முன்னே.

●

அரசனுக்குப் பாடம்

'மங்களம்'

ரொம்ப வருஷங்களுக்கு முன்னே, ஒரு தேசத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் மகாக் கருமி. ஏழைகளிடம் இரக்கம் காண்பிக்க மாட்டான். கருமித் தனத்தை விடும்படி பலவழிகளிலும் புத்தி சொன்னான் மந்திரி. கருமியின் காதில் மந்திரியின் புத்திமதி ஏறுமா? ஒரு நாள் அரசனிடம் 'அரசரே நான் சொல்வதைத் தாங்கள் எப்பொழுதும் கேட்பதில்லை. இன்று நான் சொல்வதை நீங்கள் அவசியம் செய்யவேண்டும். இப்பொழுது நான் சொல்வதை தாங்கள் கேட்கவில்லையானால் ஜனங்களின் வெறுப்புக்கு ஆளாவீர்கள். வேறு ஒன்றுமில்லை. கொஞ்ச நாளைக்குத் தாங்கள் தேசாந்திரம் சென்றுவர வேண்டும். இது தான்' என்றான் மந்திரி.

ரொம்ப நேரம் யோசித்தான் அரசன். கடைசியாக மந்திரி சொல்வதுபோல் செல்வதாக ஒப்புக்கொண்டான் அரசன்.

ஒரு கப்பல் கட்டியாகிறது. கப்பல் கட்டி முடிந்துவிட்டது. அரசன் கப்பலில் ஏறினான். கப்பல் புறப்பட்டது. அடுத்த தேசத்தை அடைந்தது கப்பல். கப்பலைவிட்டு இறங்கினான் அரசன். சேவகர்களைக் கப்பலிலே இருக்கும்படி சொல்லிவிட்டு சாதாரண மனிதனைப்போல உடை உடுத்திக் கொண்டான். தானே தனியாகப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டான். வழியிலே ஒரு சிறு குடிசையைப் பார்த்தான், நுழைந்தான். அங்கே ஒரு இடையனும் அவன் பெண்டாட்டியும் இருக்கிறார்கள். இடையனிடம், 'எனக்குப் பசியாக இருக்கிறது. சாப்பாடு போடுவாயா?' என்றான் அரசன். 'நானோ இடையன், அரசனுடைய மாடுகளை மேய்ப்பவன். அதற்குக் கூலியாக தினம் இரண்டு ஆழாக்கு அரிசி கொடுப்பார்கள். அதைக் கொண்டு தான் நாங்கள் சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கிறோம். கொஞ்சம் பொறுத்திருங்கள். இன்றையக் கூலி அரிசி வாங்க என் பெண்டாட்டியை அரண்மனைக்கு அனுப்புகிறேன், அவள் திரும்பி, வந்ததும் சமையல் செய்து உங்களுக்கும் சாப்பாடு போடுகிறோம்' என்றான் இடையன்.

இடையன் தன் பெண்டாட்டியைக் கூப்பிட்டு 'அரண்மனைக்குப் போ. போய் இன்றையக் கூலி அரிசியையும், கூட

ஒரு விருந்தாளி வந்திருக்கிறார் அவருக்காக ஒரு ஆழாக்கு அரிசி வேண்டுமென்றும் கேட்டு வாங்கிவா' என்றான்.

பெண்டாட்டி அரண்மனைக்குப் போகிறாள். அரண்மனைத் தானிய மண்டியிலிருந்து வேலைக்காரர்களுக்கு அரிசியை அளந்து போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இடைச்சி காத்துக்கொண்டிருக்கிறாள். கடைசியாகத் தானியம் அளப்பவனிடம் 'அண்ணே விருந்தாளி வந்திருக்கிறார். அவருக்காக ஒரு ஆழாக்கு அரிசி அதிகமாக வாங்கி வரும்படி வீட்டுக்காரர் சொல்லிவிட்டார்' என்றாள் இடைச்சி. தானியம் அளப்பவன் 'தரமுடியாது' என்றான். 'ஐயோ' வந்த விருந்தாளியைப் பட்டினி போட முடியாதே?' என்றாள். 'எப்படியாவது தொலை. கண்டிப்பாக ஒரு அரிசிகூட கூடத்தரமுடியாது'' என்று கத்தினான் அளப்பவன். கத்திய சத்தம் ராணிக்குக் கேட்டது. ராணி மகாப்

புண்ணியவதி. எச்சிக்கையால் காக்கையைக்கூட ஓட்டமாட்டாள். தானியமண்டிக்கு வெகு வேகமாக வந்தாள் 'நடந்தது என்ன?' என்றான். 'மகாராணியே எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறார். அவருக்காக ஒரு உழக்கு அரிசி அதிகமாகக் கேட்டேன். அதற்காக அளப்பவர் என்னைக் கோபித்துக் கொள்கிறார்' என்றாள் இடைச்சி.

'ஓ அதற்காக அவன் கோபித்துக் கொண்டானா. அவன் உன்னைக் கோபித்துக்கொள்ளக்கூடாது. நீ கூடக் கேட்டதற்காக உனக்குத் தரவேண்டிய அரிசியில் ஒரு ஆழாக்கைக் குறைத்துத்தர வேண்டியதுதானே. போடி போ முட்டாளே. இவ்

கேயே நின்றால் ஒரு அரிசிகூட உனக்குக் கிடைக்காது' என்று சொல்லியபடியே ராணி அளப்பவனைப் பார்த்து 'அவனுக்குக் கொடுக்கவேண்டியதைப் பாதியாகக்கொடு. பாவம், அரிசியே கொடுக்காவிட்டால் பட்டினியால் செத்துவிடுவார்கள்' என்று சொன்னாள்.

அளப்பவன் ஒரு ஆழாக்கு அரிசி மட்டுமே கொடுத்தான். இடைச்சி மனவருத்தத்தோடு கிடைத்ததை வாங்கிக்கொண்டு வீட்டுக்குவந்து சேர்ந்தாள்.

வீட்டிலே இடையனும், அரசனும் பசியால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இடைச்சி வீட்டுக்கு வந்ததும் 'அடியே நாங்கள் இரண்டு பேர்களும் பசியால் தவித்துக்கொண்டிருக் கிறோம். நீ ஆடி அசைந்து நடந்து வருகிறாயோ?' என்று கோபித்துக்கொண்டான் இடையன்.

'ஐயோ, அதையேன் கேட்கிறீர்கள். அந்தப் பாவி தானியம் அளப்பவன் விருந்தாளிக்கு ஒரு உழக்குக்கூட அரிசி தரமாட் டேன் என்று வம்பு பண்ணினான்' என்று இடைச்சி சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது இடைமறித்து 'அப்படி அவன் சொன்னால் ராணியிடம் சொல்வதற்கென்ன?' என்றான் இடையன்.

'அடே அப்பா, அவள் மகாராணியாச்சே. அவள் வந்து எப் பொழுதும் தருவதிலே ஒரு உழக்கு அரிசி குறைத்துப்போடச் சொன்னாள். அந்த ஒரு உழக்கும் நாம் சாகாமல் இருந்து அவர் களுக்கு உழைப்பதற்காகத்தான் போடச் சொன்னாள்' என்றாள் இடைச்சி.

'சரி, போகிறது. அந்த ஒரு உழக்கு அரிசியை சீக்கிரம் வேகவை. வெந்ததும் ஆளுக்குக் கொஞ்சமாகச் சாப்பிடலாம்' என்றான்.

பானையிலே அரிசியைக் கொட்டி வேக வைத்தாள். சமையல் ஆகிவிட்டது. இலைபோட்டாள், மூன்று இலைகள். விருந்தாளி, இடையன், இடைச்சி மூன்றுபேரும் உட்கார்ந்தார்கள். பானைச் சோற்றைப் பகிர்ந்து சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்தது. இடைச்சி தூங்கிவிட்டாள். இடையனும் அரசனும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது இடையன் அரசனிடம் 'விருந்தாளியே, இன்று அரசனுடைய மாளிகை எரிந்துவிடும். அரசனும் ராணியும் செத்துவிடுவார்கள். அரண்மனை எரியும் நேரத்தில் நானும் என் மனைவியும் இறந்துவிடுவோம். நாங்கள் செத்ததும் அறையிலே உள்ள ஒரு பானையில் இருக்கும் மூன்று பவுனை எடுத்துக்கொள். அதிலே ஒரு பவுனைச் செலவு செய்து எங்கள் இருவர் பிணத்தையும் எரித்துவிடு. எரித்துவிட்டு நீ திரும் பும்பொழுது ஒரு குன்றின்மேல் ஒரு வீட்டைப் பார்ப்பாய். அது ஒரு விவசாயியின் வீடு. விவசாயியின் மனைவி கர்ப்பமாக இருக் கிறாள். இரட்டைப் பிள்ளைகளைப் பெறுவாள். 'இரட்டைப் பிள்ளை களைப்பெற்றுவிட்டாயே அவர்களை நான் எப்படி வளர்க்கமுடியும்.

உனக்கும் எனக்குமே சாப்பாட்டுக்கு இல்லை' என்று விவசாயி கோபித்துக்கொள்வான். அந்த விவசாயியிடம் மீதமுள்ள இரண்டு பவுனைக் கொடுத்து பிள்ளைகளை வளர்க்கும்படி சொல்லு. இந்த ஊர் மந்திரிகள் இருவர் மனைவிமார்களும கர்ப்பமாக இருக்கிறார்கள். மந்திரிகள் இருவரும் 'எனக்குப் பெண்ணும், உனக்கு ஆணும் பிறந்தால் இருவருக்கும் கல்யாணம் செய்துவிடலாம்' என்று பேசி வைததிருக்கிறார்கள். நானும் என் மனைவியும் பெண்ணும், ஆணுமாக அவர்கள் இருவருக்கும் பிறக்கப் போகிறோம். நான் பிறந்ததிலிருந்து உன்னைப் பார்த்துப் பேசும்வரை பால் குடிக்கமாட்டேன். என்னை வந்து அவசியம் நீ பார்க்க

வேண்டும். உன்னிடம் பேசிவிடடுத்தான் பால் குடிப்பேன்' என்றான் இடையன்.

அரசனும் இடையனும் தூங்கிவிட்டார்கள். நடுச்சாமம். ஒரே இரைச்சல். அரசன் விழித்தான். பார்த்தான். அரண்மனை எரிகிறது. இடையனையும், இடைச்சியையும் பார்த்தான். அவர்கள் இருவரும் செத்துவிட்டார்கள். பானையிலிருந்த மூன்று பவுனை எடுத்துக்கொண்டான். ஒரு பவுனுக்கு பிரேத அடக்க சாமான்களைச் சேகரித்துக்கொண்டான். இடையன் இடைச்சி இருவருடைய பிணத்தையும் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய்

அடக்கம் செய்தான். திரும்பி வரும்பொழுது ஒரு வீட்டில் இரைச்சல் கேட்டது. உள்ளே போனான் அரசன். 'என்னய்யா இவள் இரட்டைப் பிள்ளை பெற்றிருக்கிறாள். நான் என்ன செய்வேன்? நானோ ஏழை' என்றான். உடனே மீதமிருந்த இரண்டு பவுன்களைக் கொடுத்து 'உன் இரண்டு பிள்ளைகளை வளர்க்கவும்' என்று சொன்னான் அரசன். சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வழியிலே வரும்பொழுது 'மந்திரிகள் இருவரின் மனைவிமார்களும் பிள்ளைகள் பெற்றிருக்கிறார்கள். மந்திரிகள், ஒருவர் மகளை ஒருவர் மகனுக்கே கல்யாணம் செய்துகொடுக்கப் போவதாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆண் குழந்தை இன்னும் பால் குடிக்கவில்லையாம். அது பிழைக்குமோ என்னவோ?' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். அரசன் காதில் அவர்கள் பேச்சு விழுந்தது. உடனே மந்திரியின் மாளிகைக்குப் போனான் அரசன். சேவகர்கள் குடியானவன்போல் இருக்கும் அரசனை மாளிகைக்குள்விட மறுத்தார்கள். உடனே அரசன் சேவகர்களிடம் மந்திரியின் குழந்தையைப் பால்குடிக்கச் செய்வதற்காக வந்திருக்கிறேன்' என்றான். அரசன் சொன்னதை மந்திரியிடம் சொன்னார்கள் சேவகர்கள். மந்திரி, வந்திருப்பவனை உள்ளே அனுப்பும்படி உத்திரவிட்டார். அரசனை உள்ளே அனுமதித்தார்கள். குழந்தை இருக்கும் இடத்திற்கு அழைத்துப்போனார்கள். அரசன் குழந்தையைப் பார்த்தான். உடனே குழந்தை 'நீ வந்த காரியம் முடிந்தது. இதுதான் உனக்குப் பாடம். நீ உன் தேசத்துக்குப் போகலாம்' என்றது. அரசன் புறப்பட்டான். குழந்தை பால் குடித்தது.

அரசன் தன் தேசத்துக்கு வந்து சேர்ந்தான். ஏழை எளியவரிடம் அன்பாக இருந்தான். தருமங்கள் செய்தான். அரசனைக் குடிமக்கள் பெரிதும் விரும்பினார்கள்.

சுளைக்குள் சுளை



இது சாத்துக்குடிச் சுளை. இதன் மேலே, முடிச்சுப் போல் சுளையுடன் ஒன்று ஒட்டிக்கொண்டிருப்பதைப் பாருங்கள். அதை உறித்துப் பார்க்கும்போது, அதற்குள் ஒரு சுளையும், விதைகளும் இருந்தன. இது இயற்கையின் விநோதம் அல்லவா? இதை அனுப்பியவர்: பி. வி. ராமமூர்த்தி, அணில் தம்பி, சென்னை.

ரமணியின் அதிர்ஷ்டம்

வி. கிருஷ்ணன், சென்னை

மணி டாங்! டாங்! என்று பத்து அடித்தது. ரமணிக்கு பரீக்ஷையின் ரிஸல்டு தெரிய இன்னும் அரைமணிதான் இருக்கிறது. ரமணிக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஏன் தெரியுமா? அந்தத் தடவை அவன் ஒரு பேப்பராவது சரியாக எழுதவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் அவன் பலவாறாக சிந்திக்கலானான்.

அப்பொழுது ரமணியின் தாயார் அவ்விடம் வந்து "ஏண்டா ரமணி! எல்லாப்பையன்களும் ரிஸல்டு பார்க்க பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டார்களே? நீ மாத்திரம் ஏன் பிரமை பிடித்தவன்போல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய், போ!" என்று அவனை அதட்டி அனுப்பினாள். தலை கிர்... என்று சுற்ற ஆரம்பித்தது. அவன் பெயர், லிஸ்டு போர்டில் காணோம். ரமணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வீட்டிற்குச் சென்றால் அப்பாவிடமிருந்து நல்ல உதைகிடைக்கும். ஆதலால் அங்கு ஒரு க்ஷணமும் இருக்ககூடாது என்று ஆலோசித்து, ஐந்து மைல் தூரத்திலுள்ள கருணகிரி என்னும் காட்டை நோககிப் புறப்பட்டான். வழியிலுள்ள காடு, மலைகளெல்லாம் தாண்டிச் சென்றான்.

அன்று சாயந்திரம் சூரியன் அஸ்தமன வேளை. ரமணி காட்டுப்பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்தான். தூரத்தில் "டக்...டக்....டக்...டக்...." என்று குதிரைகள் வரும்காலடிச் சத்தம் கேட்டது. ரமணி திடுக்கிட்டான். பக்கத்திலுள்ள உயரமான, கிளைகள் உள்ள ஒரு மரத்தின் மீது "கபகப" என்று ஏறினான். உச்சிக்கிளையை அடைந்து, குதிரைகள்வரும் திசையை நோக்கி ஊர்ந்து கவனித்தான்.

சிறிது தூரத்தில் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தினர் வந்துகொண்டிருநதனர். கடைசியில் அவர்கள் ரமணி இருககும் மரத்தின் அடியை அடைந்தனர். பிறகு எல்லோரும் குதிரையை விட்டுக் கீழே இறங்கி, ஒரு பெரிய பிரம்மாண்டமான பாறாங்கல்லின் அருகே சென்று. "தர்வாஜா....கோலோ!" (வாசல் கதவைத் திற) என்று ஏககாலத்தில் உரக்கச்சொன்னார்கள். உடனே அப்பெரிய பாறாங்கல்லானது பர...பர....என்ற சப்தத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகத் திறந்தது. பிறகு அவர்கள் கொள்ளை

யிட்ட பணங்கள் எல்லாவற்றையும் ஒரு மூலையில் போட்டனர். ரமணி இவை எல்லாவற்றையும், உற்று நோக்கிக் கொண்டே இருந்தான். அவர்கள் வெளிவந்து "தர்வாஜா பந்து கரோ..."! (வாசற்கதவை மூடு), என்று உரக்கச் சொன்னார்கள். அப்பெரிய பாருங்கல்லும் சிறிது சிறிதாக மூடிக்கொண்டது.



பிறகு அவர்கள் ரமணி இருக்கும் மரத்தடியை அடைந்து, துப்பாக்கிகள் எல்லாவற்றையும் அங்கே போட்டுவிட்டு, மரத்தைச்.சுற்றி நாலாபக்கங்களிலும் படுத்துக்கொண்டனர். அன்று பூராவும் அவர்கள் அலைந்து திரிந்ததால் அயர்ந்து தூங்கிவிட்டனர்.

அவர்கள் நன்றாக ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது, ரமணி மெதுவாக மரத்தை விட்டு கீழே இறங்கினான். அங்கிருந்து ஒரு பெரிய துப்பாக்கியை எடுத்துக்

கொண்டு, மறுபடியும் மரத்தின்மேல் ஏறி உச்சிக்கிளையை அடைந்தான். பிறகு அவர்களை நோக்கி துப்பாக்கி பட்டனை அழுத்தினான். அவ்வளவுதான்...! டுமீர்...! டுமீர்...! டுமீர்....! சிறிது நேரத்திற்குள் எல்லோரும் மடிந்தனர். உடனே ரமணி மரத்தைவிட்டு கீழே இறங்கி பாறையின் அருகே சென்று "தர்வாஜா....கோலோ....! என்று இரண்டு தடவை உரக்கக் கூவினான். அப்பாறையும் திறந்தது.

ரமணி பயத்துடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அங்கே நிறைய பணக் குவியல்கள் இருந்தன. அதைப் பார்த்ததும், ரமணி மூர்ச்சை அடைந்தான். பிறகு மயக்கம் தெளிந்து அந்த பணத்தையெல்லாம் ஒரு பெரிய துணியில் கட்டிக்கொண்டு வெளியே வந்தான். அப்பாறையை நோக்கி "தர்வாஜா பந்துகரோ" என்று கம்பீரமாகச் சொன்னான். உடனே அப்பாறையும் மூடிக்கொண்டது. ரமணிக்கு பணமூட்டையை எவ்வாறு தூக்கிச் செல்வதென்று தெரியாமல் நாலாபக்கமும் பார்த்தபொழுது, அவன் ஏறின மரத்தின்கீழ் அநேக குதிரைகள் இருந்தன. உடனே ரமணிக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. மரத்தை நோக்கிச் சென்றான். அங்கு கட்டப்பட்டுள்ள குதிரைகளினின்றும், ஒரு பெரிய குதிரையை அவிழ்த்து, அதன்மேல் பணமூட்டையை வைத்து, தானும் ஏறி உட்கார்ந்தான். குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, அதன் முதுகில் கையினால் ஒரு "சொட்டு" கொடுத்தான்.

குதிரை காற்றாய்ப் பறந்தது. ரமணியின் வீட்டை அடைந்தது. அங்கு திண்ணையில் பேப்பர் படித்துக்கொண்டிருந்த ரமணியின் தகப்பனார், ரமணியைப் பார்த்ததும், பேப்பரை போட்டுவிட்டு ஓடிவந்து, அவனை மார்போடு அணைத்துக்கொண்டு சொன்னார்: "ஏண்டா, கண்ணே! நீ ஏன் என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் வீட்டைவிட்டு ஓடிப்போய்விட்டாய்? நீ போனதிலிருந்து எங்களுக்கு ஒரே கஷ்டமாகத்தான் இருந்தது. நான் பள்ளிக்கூடம் சென்று, தலைமை உபாத்தியாயரிடம் விசாரித்தபொழுது, நீ "ஸெகண்டு விஸ்டில்" பாஸ் பண்ணினதாக கூறினார். உன்னைத் தேடிக்கொண்டு நான் எங்கேயல்லாமோ அலைந்தேன்" என்றார். ரமணி நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறினான்.

அன்றைக்கு ரமணிக்கு வந்த ஆனந்தத்தின் அளவை கேட்கவும் வேண்டுமா!

❁

சுட்டிப் பையன்

சர. சிவஞானம்

சீனுவுக்கு ஆறுவயது. பார்க்க ரொம்ப அழகாய் இருப்பான். அவனுக்கு விசாலமான கண்கள். நெளிந்த புருவம், சந்திரனைப் போன்ற முகம். கறுத்து அடர்ந்த நெளிமயிர். அம்மாவுக்கு சீனுவிடம் ரொம்பப் பிரியம். ஒரே பையன்.

ஆனல் சீனுவிடம் அழகுக்கேற்ற குணமில்லை. அரை நிமிஷம் சும்மா இருக்கமாட்டான். வீட்டில் தங்கவே மாட்டான். துறு துறு வென்று ஓடுவான், ஆடுவான். பாடுவான். எல்லாரையும் கேலி செய்வான். வீதியில் விளையாடும் குழந்தைகளிடம் ஓடுவான். அவர்களுக்கு முன்னல் நின்றுகொண்டு கண்ணை ஒரே சுழலாய் கிருகிருவென்று சுற்றுவான். பேய் முழி முழிப்பான். பயமுறுத்துவான். நாக்கைத் துறுத்துவான். 'வவ் வவ்' என்பான். கன்னங்களை உப்பிக் காண்பிப்பான். மூக்கைத் திருகுவான். நாக்கை நீட்டி நீட்டி, அதைச் சுழற்றிச் சுழற்றி எல்லாரையும் கேலி செய்வான். பள்ளிக்கூட வாத்தியாருக்குக் கூட பயப்பட மாட்டான். அவருக்குப் பின்னல் நின்று கொண்டு நாக்கை நீட்டி நீட்டிக் கேலி காட்டுவான்

சீனுவின் சுட்டித்தனம் அம்மா காதுக்கு எட்டியது. அம்மா, மகனை எவ்வளவோ கண்டித்துப் பார்த்தாள். "டே சீனு! உன்னைப் படு சுட்டி என்று எல்லாரும் என்னிடம் புகார் செய்கிறார்கள். கண்ணைச் சிமிட்டி, நாக்கைத் துருத்தி, மூக்கைத் திருகி எல்லாக் குழந்தைகளையும் நீ பயமுறுத்துகிறாய். என்னைக்கூட கேலி செய்கிறாய். அப்பாவிடம் சொல்லி, உன்னை அடிக்கச் சொல்வேன். எல்லாருக்கும் நல்ல பிள்ளையாய் இரு. ஒருவரையும் கேலி செய்யாதே" என்று தாய் புத்திமதி சொல்லிக்கொண்டே வந்தாள்.

ஒட்டகத்தின் பலம்

ஒட்டகம் மிக வலிவுடைய பிராணி. ஆயிரம் பவுண்டு பளுவுள்ள சாமான்களை எளிதாய்ச் சுமந்து கொண்டு, சுமார் 25-மைல் தூரத்தை எட்டு மணி நேரத்திற்குள் கடந்து போய் விடும். தண்ணீர் குடிக்காமலும் ஆகாரம் சாப்பிடாமலும் அதனால் பாலைவனத்தில் மூன்று நாள் சுற்ற முடியும். ஒட்டகத்தின் சராசரி வயது ஐம்பது. நான்கு வயதிலிருந்தே ஒட்டகம் கடுமையாய் வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

இவற்றையெல்லாம் சீனுவா கேட்பான்? உடனே அம்மாவை முன்னே விட்டுப் பின்னாலிருந்து நாக்கைத் துளாவி, கண்ணைச் சுழற்றி, கேலி செய்தான்.

ஒரு நாள் சீனுவின் பாட்டி, "கண்ணே! நீ யாரையும் கேலி செய்யாதே. என்றைக்காவது ஒருதரம், வேடிக்கை வினையாய் வந்துவிடும். கண் அப்படியே நிலைக்குத்திப் போயிடும். நாக்கு நீட்டினபடியே நின்றுபோகும். அப்புறம் பேச வராது. இந்தமாதிரி எல்லாம் செய்யாதேடா கண்ணு" என்றாள். இதைக் கேட்ட சீனு, "பூ...இந்தப் பத்தாம்பசலி பாட்டியின் மூஞ்சியைப் பாரு! எனக்குப் புத்தி சொல்றாளாம்...புத்தி. இந்தக் கிழப்பிணம் உளறுகிறது" என்று, நாக்கை நீட்டி, கண்ணைச் சிமிட்டிக் காட்டிவிட்டு, ஓடிப்போய் விட்டான். சீனுவை யாராலும் திருத்தவே முடியவில்லை. அவன் அப்பாவுக்கு மட்டும், சீனுவின் சுட்டித்தனம் அதிகமாய்த் தெரியாது. பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காய்ப் போய்ப் படித்து வருகிறான் என்றே அவர் நினைத்திருந்தார்.

ஒரு நாள் சீனு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வரும் வழியில், எல்லாப் பையன்களையும் கேலி செய்துகொண்டே வந்தான். அப்போது திடீரென்று ஒரு குளிர்காற்று அடித்தது. பலமாய் அடித்தது. வெடவெட வென்று நடுநடுக்கியது. வீதியில் சென்றவர்களுக்கெல்லாம் கை கால்கள்கூட மரத்துப்

போயிற்று. சீனு லேசான சட்டையும், ஒரு டிராயரும் போட்டிருந்தான். அப்போது அடித்த குளிர் காற்றை சீனுவால் தாங்க முடியவில்லை. அவன் கை கால்கள் ரத்த ஓட்டமின்றி மரத்துப் போய் விட்டன. அவனால் ஒரு அடி கூட நகர முடியவில்லை. அந்தச் சமயத்தில் சீனு, நாக்கை இரண்டங்குலம் நீட்டி, கண்ணைக் கிர்ரென்று சுழற்றிக்கொண்டிருந்தான் அல்லவா? அந்தக் குளிரால் அவன் முகத்தில் ரத்தவோட்டம் தடைப்பட்டு, விழித்த கண் விழித்தபடி, இரண்டு கண்களும் நிலைக்குத்தின நாக்கு நீட்டித் துறுத்தினபடியே நின்றுபோய் விட்டது. சீனுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. பயந்தான். திடுக்கிட்டான். சிரமப்பட்டு நாக்கை உள்ளே இழுக்க முயன்றான். முடியவில்லை. கண்களை, இப்படி அப்படித் திருப்பக் கூட முடியவில்லை. அழுதான். அலறினான். இந்தச் சமயத்தில் அவன் கிளாஸ் வாத்தியார், சீனுவின் பக்கத்தில் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து விட்டான் சீனு. வாத்தியாரும் சீனுவைப் பார்த்து விட்டார். நீட்டிய நாக்கும், சுழற்றிய கண்ணும் சீனுவிடம் வாத்தியாருக்குக் கோபத்தைக் கிளப்பின. அவருக்கு சீனுவிடம் படுகோபம் வந்தது. தன்னைக் கேலி செய்கிறான் சீனு என்று நினைத்துக் கொண்டார். நன்றாக அவனை உதைக்கலாமா என்றுகூட நினைத்தார். அதற்குள் சீனு, அங்கு நிற்காமல் மாயமாய் பறந்து விட்டான். பக்கத்துச் சந்தில் மறைந்து விட்டான்.

> ### அதிசயப் பன்றி
>
> உலகத்திலேயே மிகப் பெரிய பன்றி ஒன்று இருக்கிறது. அதை நிறுத்துப் பார்த்தால் அதன் கனம் 360 வீசை இருக்கிறது. நீளம் 8 அடி. அமெரிக்காவில் ஒரு விவசாய சங்கத்தார் அதை விலைக்கு வாங்கி இருக்கின்றனர். அதன் விலை 2940 பவுன். இப்பொழுது இந்தப் பன்றி, இங்கிலாந்தில் லண்டன் நகரில் கண்காட்சி சாலையில் இருந்து வருகிறது. இன்னும் சில தினங்களில், இந்தப் பன்றி ஆகாயக் கப்பலில் அமெரிக்காவிற்குப் பயணமாகும்!

சீனுவின் சுட்டித் தனத்தை நினைத்துக்கொண்டே வாத்தியார் நடந்துபோய்க் கொண்டிருந்தார். அவர், வழியில் சீனுவின் தகப்பனார் வருவதைப் பார்த்தார். "உங்கள் பையன் சங்கதியைக் கேட்டீர்களா? அவன் படு சுட்டி. எல்லாரையும் கேலி செய்கிறான். நான் இப்பொழுது வந்து கொண்டிருக்கும்போது, என்னைக்கூட கேலி காட்டிவிட்டு, ஓடி ஒளிந்துகொண்டான். வீட்டிற்கு வந்தவுடன், அவனை நன்றாகக் கண்டித்து வையுங்கள்'' என்றார். இதைக்கேட்ட

தகப்பனுருக்கு, பையன்மேல் ஆத்திரம் தாங்க முடியவில்லே.

சீனு வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தான். முகத்தை அம்மாவிடம் காட்டாமல் அங்கும் இங்கும் ஓடியாடித் திரிவதுபோல் இருந்தான். அம்மா, மகனைக் கைகால் கழுவி சுத்தம் செய்துகொண்டு காப்பி சாப்பிட வா என்று கூப்பிட்டாள். சாப்பாட்டறையில் போய் உட்கார்ந்தான். சீனு இரண்டு இட்லியைப் புட்டு வாய்க்குள் போட்டு, உதப்பித் தள்ளினுன். கோணல் கண், அம்மாவிற்குத் தெரியக்கூடாதென்று குனிந்துகொண்டே சாப்பிட்டான். மகனிடம் அம்மா ஏதோ பேச ஆரம்பித்தாள். அதற்குச் சீனு பதில் சொல்ல முயன்ருன். நாக்கு வாய்க்குள் இருக்காமல் வெளியே முன்போல் வந்து தொங்கிவிட்டது. மகனே அம்மா உற்றுப் பார்த்தாள். திடுக்கிட்டாள். "சீனு! என்னிடம் நீ உன் நாக்கை எதற்காக நீட்டிக் காட்டுகிருய்? சொல்லு உண்மையை. மரியாதையில்லாத சுட்டிப்பையன் என்று பெயர் எடுக்காதே. கெட்டுப் போகாதே" என்ருள். சீனு என்ன செய்வான், பாவம்! அவனுக்கோ நாக்கு சுவாதீனத்தில் இல்லே. வாய் பேச வரவில்லே. தாயார் கோபம் கொண்டாள். சாப்பாட்டு அறையிலிருந்து மகனே வெளியில் கொண்டுபோய் விட்டு விட்டாள்.

பார்த்தான் சீனு. அவனுக்கு ஒன்றும் புரியவில்லே தான் படும் அவஸ்தையை அம்மா சரியாய்த் தெரிந்துகொள்ளவில்லே என்று நினேத்தான். மாடிக்கு ஓடினுன். படுக்கையை விரித்தான். போர்வையை எடுத்து போர்த்திக் கொண்டு, தலேயையும் போர்வைக்குள் மறைத்துக் கொண்டான். அப்பா வந்து ஏதாவது கேட்டால், முகத்தைக் காட்டாமல் அவருக்குப் பதில் சொல்லிவிடலாம் என்று நினேத்தான்.

கொஞ்ச நேரம் கழித்து, அப்பா வீட்டுக்கு வந்ததும் சீனுவின்மேல் அவருக்கு ஒரே கோபம். "எங்கே சீனு ?" என்று அடித்தொண்டையில் மனேவியைக் கேட்டார். "வாத்தியாரைக் கேலி செய்தானும். பிள்ளேகளே பயமுறுத்தினுனும். இதுதானு அவனுக்குப் பிழைப்பு? எங்கே அவன்?" என்று கேட்டார். "அவன் என்னேக்கூட கேலி செய்தான். வெளியில் கொண்டு போய்விட்டேன். மாடியில் போய்படுத்துக் கொண்டிருக்கிருன்" என்று சொன்னுள், மனேவி

அப்பா, மாடிக்குப் போனுர். "டேய் சீனு! என்ன செய்கிருய்?" என்ருர். பையன் நடுங்கி போய்ப் போர்

புட்டியிலிருந்து பால் குடிக்கும் வேங்கைகள்

காமன்வெல்த் கிரிக்கெட் கோஷ்டி கான்பூர் போகும் வழியில் காசியில் சுற்றிப் பார்ப்பதற்காக சுமார் 5-மணி நேரம் தங்கினர். விஜயநகரம் மகாராஜ குமாரர் தமது அரண்மனையில் அவர்களுக்குச் சிற்றுண்டி உபசாரமளித்தார்.

விஜயநகரம் அரண்மனையில் இரண்டு வேங்கைகள் புட்டியிலிருந்து பால் குடிப்பதைக் கண்டதாக காமன்வெல்த் கோஷ்டி மானேஜர் ஜார்ஜ் டக்வர்த் கூறினர்.

வைக்குள்ளிருந்து மெது வாகவெளியே தலையைநீட்டினன். "நீ உன் வாத்தியாரிடம் நாக்கைநீட்டி, கண்ணைச் சுழற்றி கேலி செய்தாயா? உனக்குப் பைத்தியமா? நடந்தது என்ன? சொல் உண்மையை?" என்ருர். நாக்கை உள்ளே இழுத்துப் பதில் சொல்ல முடியாமல் பையன் தலையை ஆட்டினன் "நான் ஒன்றுமே செய்ய வில்லையே" என்பது போல் தலையை ஆட்டி அசைத்தான். "நீ தலையை அசைத்தால் போதாது. உண்டு அல்லது இல்லை என்று வாயைத் திறந்து பதில் சொல். இல்லா விட்டால் உன்னை இன்று லேசில் விடமாட்டேன்" என்ருர். பையன் பயந்துபோய், "அப்பா... அப்பா!...நான்...." என்ருன். அதற்குமேல் பேச, அவனல் முடியவில்லை. நாக்கு வளைந்து கொடுக்கவில்லை. தகப்பனருக்குக் கோபம் பொங்கியது. "டேய், சுட்டிப் பயலே! உன்போக்கிரித் தனத்தை எல்லாரிடமுமா காட்டுகிருய்? உன் வாத்தியாரைக் கேலிசெய்தாய். உன் அம்மாவைக் கேலிசெய்தாய். என்னையும் கேலிசெய்கிருய். அதற்காக இந்தா மூன்று உதை (பளார் பளார் என்று முதுகில் மூன்று அடி அடித்தார்.) வாங்கிக்கொள். இனி மேலாவது உன் நாக்கு அடங்கி ஒடுங்குமா? என்று பார்க்கிறேன்" என்று கர்ஜித்தார்.

இதற்குப் பிறகு, சில நாட்கள் சென்றன. வைத்தியம் பார்த்தபின் சீனுவின் நாக்கு, பழைய நிலைமைக்கு சரிப்பட்டு வந்தது. இருந்தாலும் சீனுவிற்கு கடகடவென்று பேச முடியவில்லை. கொஞ்சம் திக்கித்திக்கித்தான் பேசினன். ஆனல், அவன் கண்கள்மட்டும், சீர்திருந்தவில்லை. கோணல் கண்களாகவே நின்று போய் விட்டன. டாக்டரிடம் காட்டி கண்களைப் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடி போட்டார்கள் சீனுவுக்கு. கண்ணாடி போட்டுக்கொள்ளப் பிடிக்கவே இல்லை. சுட்டித்தனம் செய்யாமலிருந்தால் அந்தோ, கண்களாவது நன்ருய் இருந்திருக்குமே" என்று சீனு இன்றைக்கும் நினைத்து வருந்துகிருன்.

○

பாரதி கதை

[அணில் அண்ணன்]

‘ ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, நீ ஒரு குழந்தையை வையாதே பாப்பா’, என்று பாடித்தந்த பாரதியாரை நானும் பார்த்ததில்லை. நீங்களும் பார்த்ததில்லை' அவருடைய கதையைப் படித்தால் தானே, நமக்கு பாரதியாரின் பெருமை நன்றாகத் தெரியும்?

பாரதியார் காலத்தில் ஒரு தேசபக்தர் இருந்தார். அவர் பாரதியாரின் நண்பர். பாரத நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர். சிறைக்குச் சென்றவர். சிறையிலே கஷ்டப் பட்டவர். அவர் சிறைக்குச் சென்ற காலத்திலே சிறையிலே கல் உடைக்க வேண்டும், மாவரைக்க வேண்டும், கம்பளிக்கு கயிறு திரிக்க வேண்டும். சிறையிலே படாதபாடு படுத்துவார்கள். அப்படி எல்லாம் கஷ்டப்பட்டவர் அந்த தேசபக்தர்.

ஒரு நாள் அவர் பாரதியாரிடம் வந்தார். “என்ன சுவாமிகளே, பாட்டுப்பாடியே காலங் கழிக்கிறீர்களே! நான் என் வாழ் நாள் முழுதும் பாரத நாட்டின் விடுதலைக்காகப் பாடு பட்டேன். சிறை சென்றேன். படாதபாடு பட்டுவிட்டேன். இன்று எனக்குச் சோற்றுக்கு வழியில்லை. ஆதலால் ஏதாவது கெட்ட செய்கை செய்து பணம் சம்பாதிக்கலாம் என்று என் மனம் தூண்டுகிறது. யோக்கியமாய் வாழ்வதால் பசி ஆறப்போவதில்லை. இது திண்ணம். ஏதாவது பணம் தருகிறீரா? அப்படி நீர் தராவிட்டால் எங்கேயாவது திருட்டோ கொள்ளையோ செய்யட்டுமா?” என்று ஆவேசத்துடன் கேட்டார்.

வீரர் பாரதியாருக்கோ ரத்தம் கொதிக்கிறது. கையிலோ கால் காசு கூடக் கிடையாது. என்ன செய்வார்? பக்கத்து வீட்டுக்குப் போனார். கொஞ்சம் பணம் கடனாக வாங்கி வந்தார். கொடுத்ததும்தான் “பாரத சமுதாயம் வாழ்கவே” “தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று ஆவேசத்துடன் பாடினார்.

தேசபக்த நண்பரும் மனம் குளிர்ந்து மகிழ்வுடன் வீடு திரும்பினார். ‘பாரத சமுதாயம் வாழ்கவே’ என்று அவர் பாடிய பாடலை, கடற்கரைப் பிரசங்கம் ஒன்றில் அன்புருகப் பாடி மக்களுக்கு அறிவூட்டினார்.

அந்தப் பாடலை நீங்களும் பாடுங்கள். உங்களுக்கு உடனே ஒரு தனி வீரம் உண்டாகும, அன்பு உண்டாகும். பாடுகிறீர்களா

சிட்டு

"திலகன்"

கண்ணனே இங்கே வாராய்!
காற்றில் நீந்திச் செல்லும்
வண்ணச் சிட்டு தன்னை
வந்து நீயும் பாராய்!

துள்ளி வந்து இங்கே
சுவரில் மெல்ல வீற்று
கொள்ளைக் கதைகள் எனக்குக்
கூறி உள்ளம் மகிழும்!

நெல்லைப் போன்ற சிறிய
நேர்த்தி யான மூக்கால்
நெல்லைக் குத்தி எங்கோ
நீளச் சென்று மறையும்!

பச்சை இலைகள் இடையே
பஞ்சு மெத்தை விரித்து
குச்சி கிளை வைத்துக்
குஞ்சு களைக் காக்கும்!

தேனின் வர்ணம் கொண்ட
சின்னச் சிறகை நீட்டி
வானில் எங்கும் திரியும்
வந்து நீயும் பாராய்!

பெஞ்சமின் பிராங்க்லின்



இந்தியாவில் பிரபலவிஞ்ஞானிகளான சி. வி. ராமன், பிரபுல்லச் சந்திர ரே, ஜகதீஸ் சந்திர வசு முதலியோரை நாம் எப்படிக் கொண்டாடுகிறோமோ, அப்படியே அமெரிக்க மக்களுக்கு பெஞ்சமின் பிராங்க்ளின் ஆவார். இவர் 250 வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் போஸ்டன் நகரத்தில் எளியகுடும்பத்தில் பிறந்து தன் சுய அறிவாலும், விடா முயற்சியாலும் உயர்ந்த நிலைக்கு வந்தார். இவரது பிறந்த நாளை இந்த மாதம் அமெரிக்கர் கோலாகலமாகக் கொண்டாடப் போகிறார்கள்.

1752-ஆம் வருஷம் மின்னலில் இருந்து காந்தசக்தியை எவ்வாறு பிரித்தெடுத்து, அதைப் பயன் படுத்தலாம் என்று ஆராய்ச்சி செய்து முடிவு கண்டார்.

கல்வி, கலாசாரம், சமுதாய முன்னேற்றம் இவற்றை வளர்க்கப் பெரும் பணி புரிந்தவர். பல நூல்களின் ஆசிரியர். அத்துடன் பென்சில்வேனியா சர்வகலாசாலையின் ஸ்தாபகர். அமெரிக்காவில் தபால் பட்டுவாடா, போலீஸ் இலாகா ஒழுங்கு முறை இவற்றை நல்ல முறையில் சீர்திருத்திக் காட்டியவர். அமெரிக்கப் பஞ்சாங்கத்தை முதன் முதலில் கணித்தவர். அமெரிக்க குடியரசுச் சட்டத்தை வகுப்பதில் தீவிரப் பங்கு கொண்டவர். பிலடெல்பியா என்ற பட்டணத்தில் 1790-ல் காலமானார்.

உணவுப் புரட்சி

"நம் நாட்டின் உணவுப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது? நாம் ஒவ்வொருவரும் நமது சாப்பாட்டுப் பழக்க வழக்கங்களைச் சிறிது மாற்றிக்கொண்டு அரிசி முதலிய தானியங்களுக்குப் பதிலாக மாற்று உணவுகளை ஓரளவுக்கு உண்பது பெரிய காரியமல்ல. உலக நாடுகள் எல்லாம் யுத்தம் காலத்திலும், நெருக்கடியான காலங்களிலும் இவ்வாறுதான் செய்தன. நாட்டின் நலத்திற்கு வேண்டிய ஒரு காரியத்தை செய்ய முடியாதபடி நாம் அவ்வளவு தூரம் பழக்கத்துக்குக் கட்டுப்பட்டா போய்விட்டோம்?"

— பண்டித நேருஜி

நீயும் பாடலாம்

எம். வி. சந்திரசேகரன், சென்னை.

மலைக்குப் பெயர் ... கிரி
நெல்லை வருத்தால் ... —
புத்தகத்தில் இருப்பது ... —
குதிரையின் பெயர் ... —

சரஸ்வதியின் பெயர் ... வாணி
நிலத்திற்குப் பெயர் ... —
உயர ஏற உதவுவது ... —
அரசிக்குப் பெயர் ... —

வெல்லத்தால் செய்வது ... புட்டு
விலையுயர்ந்த ஆடையே ... —
பூந்தியால் செய்வது ... —
நான்கும் நான்கும் ... —

தண்ணீர் மொள்ளுவது ... வாளி
தேவதைகளில் ஒருத்தி ... —
விலங்குகளில் ஒன்று ... —
கோதுமையால் செய்வது ... —

[மேலே ஒரு பாட்டு இருக்கிறது. அந்தப்பாட்டு அரை குறையாக இருக்கிறது. அந்தக் குறையை நீங்கள் பூர்த்தி செய்யுங்கள். பூர்த்தி செய்தது சரியாக இருக்கிறதா என்று அடுத்த பக்கத்தில் பாருங்கள்.]

தேடு

உங்களுக்குத் தெரியுமா?

பிறக்கும் பொழுது நமது உடம்பில் 270 எலும்புகள் இருக்கின்றன. இறக்கும்பொழுது 206 எலும்புகள் தான் இருக்கின்றன,

நமது உடம்பில் 527 தசை நார்கள் இருக்கின்றன. அவைகளில் 83 தலையில் மட்டும் இருக்கின்றன.

உன் உடம்பில் இருக்கும் மின்சாரசக்தியைக் கொண்டு 25 வால்ட் எலக்டிரிக் விளக்கை 3 நிமிஷம் எரிக்கலாம்.

உன்னுடைய உடம்பிலிருந்து ஒரு மணி நேரத்தில் நஷ்டமாகும் உஷ்ணத்திலிருந்து ஒரு நீராவியந்திரத்தை 3 மணி நேரம் ஓட்டலாம்.

நமது ஹிருதயம் ஒரு நாளைக்கு 10, 3, 389 முறை துடிக்கிறது. நமது ரத்தம் ஒரு நாளைக்கு 16 கோடியே 80 லட்சம் மைல் பிரயாணம் செய்கிறது. ஒரு நாளைக்கு நாம் 438 சதுர அடி காற்றை உட்கொள்ளுகிறோம்.

நம் உடம்பில் இருக்கும் ரத்தம் நம் உடம்பு கனத்தில் 12-ல் ஒரு மடங்கு இருக்கிறது. நமது நகம் 0.000046 இஞ்சி நீளம் ஒரு நாளைக்கு வளருகிறது. மயிர் ஒரு நாளைக்கு 0.01714 இஞ்சி நீளம் வளருகிறது.

(தொகுத்தவர்: என். ஆர். போகிதார்.)

●

நீயும் பாடலாம்—விடை

பொரி	காணி	பட்டு	காளி
வரி	ஏணி	லட்டு	யாளி
பரி	ராணி	எட்டு	போளி

இதையும் படி

வைஷ்ணவர்கள் சிறப்பாகக் கொண்டாடும் 108 திருப்பதிகளில் பதினொன்று, திருவாங்கூர் ராஜ்யத்தில் இருக்கின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலில் அச்சிட்ட புஸ்தகம், சேவியர் மாமுனிவரின் கிருஸ்தவநூல். அது 397-வருஷங்களுக்கு முன்பு அச்சாயிற்று.

காந்திஜி 1920-ஆம் ௵ ஆகஸ்ட் ௴ 1-தேதி தமது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அன்றைக்குத்தான் இந்திய சுதந்திரத் தந்தையான பால கங்காதர திலகரும் இறந்தார்.

நாணயச் செலாவணியில் 'வராகன்' என்பது, சென்னை மாகாணத்தில் *1818*-ஆம் வருஷம் வரையில் வழக்கத்தில் இருந்து வந்தது. ஒரு வராகனின் மதிப்பு ரூ 3-8-0.

அக்பர் சக்ரவர்த்திக்கு ஒரு மருமகள் இருந்தாள். அவள் பெயர் பீகம் குல்பதன். முகலாய வமிசத்தில் அவள் ஒருத்திதான், ஹாஜி யாத்திரை செய்து வந்தவள்.

காஷ்மீர், பட்டுச் சால்வைகளுக்குப் புகழ்பெற்றது. முதன் முதலில் அந்தச் சால்வைகளை வாங்கி அணிந்து ஐரோப்பிய தேசங்களில் பரப்பியது, நெப்போலியன். அக்காலத்தில், காஷ்மீர் சால்வைகளுக்கு, பாரிசில் ரொம்ப கிராக்கி.

தபால் பெட்டிகளை வைத்து, கடிதங்களைச் சேகரிக்கும் வழக்கம், உலகத்தில் முதன் முதலில் இங்கிலாந்தில் 1852-ஆம் வருஷம் ஏற்பட்டது. இப்பொழுது லண்டன் நகரில் மட்டும் வீதிகளில் *90,000* தபால் பெட்டிகள் இருக்கின்றன.

பாப்பா பொம்மை

தங்கமணி

பொம்மை நல்ல பொம்மையாம்
புத்தம் புதிய பொம்மையாம்
அம்மா வாங்கித் தந்ததாம்
அருமையான பொம்மையாம்!

அன்பாய் ஓடி ஆடவும்
ஆசை இல்லா பொம்மையாம்
இன்ப, துன்ப, வேதனை
இன்னல் அறியா பொம்மையாம்!

பூந்தி, லட்டு எதையுமே
புசித்திடாத பொம்மையாம்
சாந்தம், கருணை, அன்புமே
சண்டை அறியா பொம்மையாம்

உண்ண உணவு, அணியவே
உடையும், குடிசை இல்லையே
என்று ஏங்கும் கவலைகள்
எதுவும் அறியா பொம்மையாம்!

சூது, வாது, வஞ்சகம்
தீய நல்ல எண்ணமும்
ஏதும் அறியா பொம்மையாம்
எந்தன் பாப்பா பொம்மையாம்!

○

பேப்பர் பிறந்த கதை

எஸ். என். ராஜன்

நான் பிறந்த கதை, உங்களில் அநேகருக்குத் தெரியாது. சிலருக்குத் தெரிந்திருக்கலாம். உங்களில் ரொம்பப் பேருக்கு என்னை உபயோகப் படுத்தத்தான் தெரியும். நான் இல்லாத இடமே இல்லை. உங்கள் கையில் இருக்கிறேன். பையில் இருக்கிறேன். என் மேல் எழுதுகிறீர்கள். என்னைத் தூக்கி மடியில் வைத்துக் கொள்ளுகிறீர்கள். என்னை பூசை செய்கிறீர்கள். என்னை வணங்குகிறீர்கள். சாமான்களைச் சுற்றிக் கட்ட என்னை உபயோகப் படுத்துகிறீர்கள். என்னை, கெட்டி அட்டையாக்கி வீடு கட்டுகிறீர்கள். நான் உங்களைப் பணக்காரர்கள் ஆக்குகிறேன். ஏழை ஆக்குகிறேன். கரன்சி நோட்டாக உங்கள் மணிபர்சில் ஒளிந்து கொண்டிருக்கிறேன். உங்களுக்காக நான் தூது செல்லுகிறேன். இன்னும் எந்த எந்தக் காரியங்களுக்கோ, நான் உங்களுக்கு ரொம்ப ரொம்ப பிரயோசனப் படுகிறேன்.

என் பெருமைகளை நான் புகழ்ந்து சொல்லுவதாக நினைக்காதீர்கள். நீங்கள், உங்கள் அப்பா, அம்மா, சிநேகி தர்கள் எல்லாருக்கும் பிரயோசனமாய் இருக்கிறீர்கள் அல்லவா? அதைப் போல நானும், உங்களுக்கு பயன்படு கிறேன். அப்படி இருந்தும், உங்களுக்கு நான் உழைக் கும்போது, என் கஷ்டங்களை எல்லாம் மறந்துபோய் விடு கிறேன். இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். என் கதையைக் கேளுங்கள், சொல்லுகிறேன்.

என்னை முதன் முதலில் உற்பத்தி செய்தது, மனிதர் கள் அல்ல. வேறு யார்? ஆகாயத்திலிருந்து நான் தொப் பென்று குதித்து வந்து விட்டேனு? அதுவும் இல்லை. பின்பு எப்படி வந்தேன். என்னை எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுல் பெற்றவள், ஒரு அம்மா! உங் களைப் பெற்றவளும் அம்மாதான். என் அம்மாவுக்கும், உங்கள் அம்மாவுக்கும் வித்தியாசம் உண்டு. உங்கள் அம்மா சோறு சாப்பிடுவாள். என் அம்மா, பட்டுப்போன மரங்களை துளைத்துக்கொண்டு, அதற்குள்ளே இருக்கும் மிருதுவான மரத் தூளைத் தான் பலகாரம் மாதிரி தின் பாள். இப்படி ஒரு அம்மா இருப்பாளா என்று ஆச்சரியப் படுகிறீர்களா? அவசரப்படாமல் இருங்கள். கதையைச் சொல்லிவிடுகிறேன்:

அவள் தான், ஒருவகை வண்டு, விஷவண்டு. மச்சுப் போனமரங்களில் உள்ள சோற்றை, அசைப்போடும்வண்டு. அந்த வண்டு அம்மாவின் படத்தை மேலே பாருங்கள். அந்த வண்டு அம்மா, மரத்தூளை தின்பாள். அதை கடை வாயில் போட்டு, குதப்பிக் குதப்பித் துப்பிவிடுவாள். அப்படித் துப்பும்போது, அவள் வாயிலிருந்து வரும் எச் சில் கலந்த மரத்தூள், காற்றில் உலர்ந்து போகும். பார் வைக்கு அடை அடையாய் இருக்கும். துப்பின இடத்தைப் பார்த்தால், வெய்யிலில் அப்பளம் உலர்த்தியது போல் இருக்கும். அதை தொட்டுப் பார்த்தால், மிருதுவாக இருக் கும். சுருளும். லேசாயிருக்கும். இதைக் கண்ட சில மனிதர் கள், அவர்களுடைய வேலைக்கு உபயோகித்துக் கொண் டார்கள். இது தான் நான் பிறந்த வழி. எனக்கு அம்மா, வண்டுதான். இன்னமும் என் அம்மா இருந்து வருகிறுள். ஆனுல் அவளை உங்கள் நாகரீக உலகம் கவனிக்குமா? கவனிக்காது.

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்புதான், உங்கள் மனிதர்கள் என்னை அதிகப்படியாய் உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். அதற்கு முன்னுல் உங்கள் மூதாதை

யர்கள், கல், தோல், ஓலை இவைகளையே பேப்பருக்குப் பதிலாய் (எனக்குப் பதிலாய்) உபயோகப் படுத்தி வந்தார்கள்.

எகிப்து தேசத்தில் "பப்-பி-ரஸ்" என்று ஒரு வகை நாணல் ஏராளமாய் இருக்கிறது. அதிலிருந்து எழுதுவதற்காக, என்னை நினைத்துக் கொண்டு, காகிதம் செய்யத் தொடங்கினர்கள்.

> **உபகாரம்**
>
> நீதிபதி :— (கைதியைப் பார்த்து) நீ ஏதாவது உன் ஆயுளில் மக்களுக்கு உபகாரம் செய்திருக்கிருயா ?
>
> கைதி :— ஆமா செய்திருக்கிறேன். ஆறு ஸி.ஐ.டி. போலீஸ் காரர்களுக்கு, நாள் தவருமல் வேலை கொடுத்து வந்து உபகாரம் செய்திருக்கேன், எஜமான் !

பப்-பி-ரஸ் என்ற எகிப்திய வார்த்தையிலிருந்துதான் "**பேப்பர்**" என்ற சொல் வந்திருக்கிறது. அதற்கப்புறம் என்னைக் கிரேக்கர்களும், ரோமர்களும் உற்பத்தி செய்து பார்த்தார்கள். பப்பிரஸ் நாணலை அறுத்துக் கொண்டு வருவார்கள். தரையைக் கூட்டி விட்டு, நெருக்கமாய் அதை பரப்பிவிடுவார்கள். அடுக்கடுக்காய், ஒன்றின்மேல் ஒன்ருய் நாலைந்து அடுக்குகளாய் காயப்போடுவார்கள். அதைத் தூக்கிக் கொண்டு போய் தண்ணீரில் நனைத்து, பிறகு வெய்யிலில் உலர்த்தி, பாரந்தூக்கி வைத்து, படியச் செய்து எழுத வைத்துக்கொள்ளுவார்கள்.

பப்பிரஸ் நாணல் விளைவு குறைந்தது. அதனல் என்னை விருத்தி செய்வதை, ரோமானியரும் கிரேக்கரும் கைவிட்டனர். அதே சமயத்தில், என்னை சீனவில் ரொம்பப் பிரியமாய் வளர்த்தார்கள். நான் சீனவில் வளர்ந்தேன். என்னை சுத்தப்படுத்தி, அழகாய் வைத்திருந்தார்கள். என் செல்வாக்கு சீன தேசத்திற்குள்ளேயே 1000-ம் வருஷம் இருந்தது. என்னை, அப்போது பிற நாட்டார் யாரும் அறிய முயற்சிக்கவில்லை. அதன் பிறகு 800-வருஷம் சென்று, அரேபியாவில் என்னைச் செய்யக் கற்றுக் கொண்டார்கள். பிறகு நான் வட ஆப்பிரிக்காவைத் தாண்டிக் கொண்டு 11-ம் நூற்ருண்டில் ஸ்பெயின் தேசத்திற்கு வந்தேன். நான் ஐரோப்பாவுக்கு வந்து 1400-வருஷங்களே ஆகிறது. அதன் பிறகுதான் என்னை எல்லா தேசத்தவர்களும் யார் என்று தெரிந்துகொண்டார்கள். அச்சு கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, என்னை கையாலும், அதற்கப்புறம் மிஷினலும் தயாரிக்க ஆரம்பித்தார்கள்.

இந்தக் காலத்தில் நான் எத்தனையோ விதமாய் காட்சி அளிக்கிறேன். நான் பட்டைப்போல் பள பள வென்று இருக்கிறேன். பஞ்சைப் போல்மிருதுவா யிருக்கிறேன்.

கெட்டியாய் இருக்கிறேன். எப்படி எப்படி எல்லாமோ இருக்கிறேன். தாகம் வந்தால், நீங்கள் தண்ணீர் குடிக்கிறீர்கள். எனக்கும் தாகம் உண்டு. அப்படி தாகம் வந்தால், நான் மையைக் குடிக்கிறேன். அப்பொழுது என்னை 'பிளாட்டிங்' என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆயில் பேப்பர், பைபிள் பேப்பர், நியூஸ்பேப்பர் என்றெல்லாம் என்னை விதவிதமாய் பெயரிட்டு உபயோகப் படுத்துகிறீர்கள்.

என்னைச் செய்வதற்கு மூங்கில், கந்தை, சணல், புல், நாணல், வைக்கோல் போன்றவை எல்லாம் உபயோகப் படுகின்றன. ஆதியில் என் வண்டு - அம்மா எந்த மரத்தை நுணுக்கித் தின்றாளோ, அந்த வகை மரங்களைத்தான் இன்றைக்கும் ஏராளமாய் என்னை செய்ய உபயோகிக்கிறார்கள். ஸ்புருஸ், பைன், ஸ்காட்ச், பாப்லர் போன்ற பல வகை மரங்களை வருஷா வருஷம் கோடிக்கணக்காய் வெட்டி அதிலிருந்து என்னைச் செய்துவருகிறார்கள். மேலே சொன்ன கந்தை, மரப்பட்டை முதலிய வஸ்துகளை சேகரிக்கிறார்கள். அவற்றைத் தோசை மாவு மாதிரி மிஷினில் அரைக்கிறார்கள். அது குழம்பு போல் வரும். அதை, திராவகம் போட்டு அழுக்கைப் போக்கி, நன்றாகப் பலமுறை சுத்தம் செய்கிறார்கள். சுத்தம் செய்தபிறகு வடி தட்டுகளில் பேப்பர்-குழம்பை ஊற்றி வார்த்து, காந்த அடுப்பில் உலர வைக்கிறார்கள். உலர்ந்து காய்ந்த பின், தேவையான அளவுக்கு வெட்டி எடுத்துக்கொள்கிறார்கள். இதை நீங்கள் கூட சுலபமாய், கையால் வீட்டில் செய்து பார்க்கலாம். அப்படித்தான் உங்கள் வீட்டில் என்னை காகித கூடைகளாகச் செய்கிறார்கள்.

என்னைச் செய்யும் யந்திரத்தை முதன்முதலில் கண்டு பிடித்தவர், ஒரு பிரஞ்சுக்காரர். அவர் பெயர் லூயி ராபர்ட். 1798-ல் அந்த யந்திரத்தைக் கண்டுபிடித்தார். கொஞ்சகாலம் கழித்து அதை இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தவர் பெயர் ஹென்ரி போர்டினியர். இவர் பெயரே அந்த யந்திரத்திற்கு இன்னமும் வழங்கி வருகிறது.

என்னை நீங்கள் ஏராளமாய் உற்பத்தி செய்து ஒரு பெரிய வியாபாரச் சரக்காக்கி விட்டீர்கள். பேப்பர் செய்யும் கைத்தொழில், உலகத் தொழில்களில் முக்கியமானதாய் இன்று விளங்குகிறது. இன்று உலகத்தில் பாதிக்கு மேல் என்னை அமெரிக்காவில்தான் உற்பத்தி செய்கிறார்கள்.

சரி, என் கதையை இத்துடன் முடிக்கிறேன். விடை பெற்றுக் கொள்கிறேன்.

●

மாய மோதிரம்

(வி. சுப்பிரமணியன், சென்னை)

லக்ஷ்மணபுரியில் பாலு என்ற ஒரு பையன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. ஒரு நாள் அவன் தாயார் அவனைக் கூப்பிட்டு பக்கத்திலுள்ள நாகபுரிக்குச் சென்று "பொருள் சம்பாதித்துவா" என்று சொன்னாள். "சரி" என்று பாலு நாகபுரியை நோக்கி நடந்தான்.

போகும்பொழுது நடுவழியில் ஒரு காடு. அவன் காட்டின் மத்தியில் சென்று கொண்டிருக்கும் பொழுது, ஒரு கிழவி அவனைக் கூப்பிட்டு "அந்த குளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவா" என்று, சிறிது தூரத்திலுள்ள ஒரு சிறிய குளத்தை சுட்டிக் காண்பித்தாள். பாலுவும் குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்தான்.

அந்தக் கிழவி ஒரு மந்திரக்காரி. அவள் உடம்பில் அடிபட்டு காயம் இருந்தது. அவளால் நடக்க முடியவில்லை. அதனால், அவனிடம் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னாள். அவள் பாலு செய்த உபகாரத்திற்காக, அவனிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்தாள். பாலு அதை, தன் கை விரலில் போட்டுக் கொண்டு, சிறிது தூரம் சென்ற பொழுது, ஐந்தாறு திருடர்கள் பாலுவை சூழ்ந்து கொண்டார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் பாலு "ஐயோ! கடவுளே! என்னை காப்பாற்றுவாயாக" என்று கும்பிட்டான். அப்பொழுது மோதிரம் கையுடன் உராய்ந்தது. உடனே ஒரு பூதம் கிளம்பிற்று. "உனக்கு என்ன வேண்டும்" என்று அது கேட்டது. அப்பொழுது பாலு "திருடர்களைக் கொன்றுவிட வேண்டும்" என்று கூறினன். பூதமும் திருடர்களைக் கொன்று விட்டு மறைந்தது.

பிறகு பாலு நாகபுரியை நோக்கி நடந்தான். அங்கு அரண்மனையை அடைந்து, அரசனிடம் தனக்கு ஒருவேலை கொடுக்கும்படி கேட்டான். அரசன் அவனை தன் சேனையில் சிப்பாயாக நியமித்தான்,

சிறிது நாள் கழித்து நாகபுரி அரசனுக்கும் லக்ஷ்மணபுரி அரசனுக்கும் சண்டை ஏற்பட்டது. சண்டை மிகவும் மும்முரமாக நடந்தது. ஆனல் நாகபுரி அரசன் கட்சியில்

அநேக யுத்தவீரர்கள் மடிந்தனர். அரசனும், பாலுவும், இன்னும் சில சிப்பாய்களும்தான் எஞ்சியிருந்தனர். உடனே பாலு மோதிரத்தைத் தேய்த்தான். ஒரு பெரிய பூதம் கிளம்பிற்று. அது "என்ன வேண்டும்" என்று பாலுவை நோக்கிக் கேட்டது. "லக்ஷ்மணபுரி சைனியம் தோற்க வேண்டும்" என்றும், "இறந்தவர்கள் எல்லோரும் பிழைக்க வேண்டும்" என்றும் பாலு கேட்டுக் கொண்

டான். என்ன ஆச்சரியம்! இறந்தவர்கள் எல்லோரும் பிழைத்து எழுந்தனர்! எதிர் கட்சியினர் புறம்காட்டி ஓடிவிட்டனர். அரசனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அவனை சேனாதிபதியாகவும் ஆக்கினார்.

நாகபுரி அரசனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு மணம் செய்விக்கும் பருவமும் வந்தது. அவள் பெயர் சந்திரகாந்தி.

அரசன் ஒரு பந்தயம் வைத்திருந்தான். "எவன் அந்த ராஜகுமாரியை மணக்க விரும்புகிறானோ, அவன் அடுத்த காட்டிலுள்ள ஒரு தங்க மாம்பழத்தை சீக்கிரம் கொண்டு வர வேண்டும்". இது தான் அந்தப் பந்தயம். பாலுவுக்கு போட்டியாக இருவர் வந்தனர். அரசன் அம் மூவரையும

தங்கமாம்பழம் கொண்டு வரும்படி பக்கத்துக் காட்டிற்கு அனுப்பினான்.

மற்ற இருவரும் பக்கத்துக்காட்டை நோக்கி வேகமாக ஓடினர். ஆனால் பாலுவோ, அரண்மனையை விட்டு வெளியே வந்தான். தெருவின் ஓரத்தில்சென்று மோதிரத்தைத் தேய்த்தான். உடனே ஒரு பூதம் கிளம்பிற்று. "என்ன வேண்டும்" என்று பாலுவைக் கேட்டது. தனக்கு ஒரு தங்க மாம்பழம் கொண்டு வரும்படி பாலு கேட்டான். மறு க்ஷணத்தில் அது மறைந்து, பிறகு தோன்றி கையில் ஒரு தங்கமாம்பழத்தை கொண்டுவந்து கொடுத்து, மறைந்தது. பாலுவும் அரண்மனைக்குச் சென்று அரசனிடம் அதைக் கொடுத்தான். அரசனும் தன் பெண்ணை பாலுவுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தான். அதுவுமல்லாமல் தன் ராஜ்யத்தில் பாதியைக் கொடுத்து, அதற்கு அவனை அரசனாகவும் முடி சூட்டினான். இவ்விதம் பாலுவும், சந்திரகாந்தியும் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

கேள்வி

உபாத்தியாயர்:— (பையன்களைப் பார்த்து) பையன்களே! இன்று ஒரு புது மாதிரியாக வகுப்பு நடத்தப் போகிறேன். நீங்கள் என்னை 20 - கேள்விகள் ஒவ்வொன்றாகக் கேட்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். எத்தனை கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியும்?

ஒரு சிறு பையன்:— (ஒரு நிமிஷம் கழித்து எழுந்து, தலை மேலே கையை வைத்துக் கொண்டு) சார்! எட்டணாவுக்கு வாங்கிய மையில், எத்தனை முற்றுப் புள்ளிகள் இருக்கும் என்று சுசீலா கேட்கிறாள். நீங்கள் பதில் சொல்லுங்கள் சார்!

இரண்டு வருடங்கள் சென்றன. இப்பொழுது பாலுவுக்கு இருபத்திரண்டு வயது இருக்கும். ஒரு நாள் நாகபுரி அரசன் பாலுவை தன் சபைக்கு அழைத்தான். பாலுவும் சபைக்குச் சென்றான். அப்பொழுது அரசன் "பக்கத்து தேசத்திற்குச் சென்று அந்த அரசனிடம் கடிதத்தைக் கொடுக்கும்படி" ஒரு கடிதத்தை பாலுவிடம் கொடுத்தான்.

பாலுவும் கடிதத்தை வாங்கிக்கொண்டு, ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு பக்கத்து நாட்டை நோக்கிச் சென்றான். இவன் வருவதை பக்கத்து நாட்டு ஒற்றர்கள் அறிந்துகொண்டனர். இவன் அரசனைக் கொல்வதற்காகத்தான், அதிவேகமாக வருகிறான் என்று நினைத்தனர். அரசனிடமும் இச்சமாச்சாரத்தைத் தெரிவித்தனர்.

அரசனுக்கு வந்து விட்டது கோபம்...! அவனை பிடித்து வரும்படி சேவகர்களிடம் கட்டளையிட்டான். சேவ

கர்களும் ஒரு கூட்டமாகச் சென்று, அவனைப் பிடித்துக் கொண்டு, அரசனின் எதிரே கொண்டு வந்து நிறுத்தினர். அரசன் அவனை தூக்கிலிடும்படி உத்தரவிட்டான். பாலுவுக்கும் அசாத்திய கோபம் வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டான். சேவகர்கள் அவனை சிறையிலிட்டனர்.

அன்று தூக்கிலிடும் நாள். சிப்பாய்கள் பாலுவை, தூக்குமேடைக்குக் கொண்டு சென்றனர். அரசனும் அவ்விடத்திற்கு வந்தான். பாலு அரசனிடம் சொன்னான், “அரசனே! நான் இறப்பதற்கு முன் குலதெய்வத்தை பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். தாங்கள் அனுமதிப்பீரா” என்றான். அரசனும் அதற்கு சம்மதித்தான். பாலு கை கூப்பிக்கொண்டு பிரார்த்தனை செய்தான். மோதிரம் கையுடன் உராய்ந்ததால், ஒரு பூதம் கிளம்பிற்று. “உனக்கு என்ன வேண்டும்” என்று அது கேட்டது. பாலு “இந்த ஊரையே ஹதம் செய்து விட்டுவா” என்று சொன்னான். அதுவும் அங்குள்ள எல்லா ஜனங்களையும் கொல்ல ஆரம்பித்தது. அரசன் ஓடோடியும் வந்து அவன் காலில் விழுந்து, தான் செய்த குற்றத்திற்காக மன்னிப்பு கேட்டான். பாலுவும் மனமிரக்கம் கொண்டு, அந்த பூதத்தை மறையும்படி கட்டளையிட்டான். அப்பூதமும் அவ்வாறே மறைந்தது. அரசன் தான் செய்த குற்றத்திற்காக, தனது ராஜ்யத்தையே அவனுக்குக்கொடுத்தான். பாலுவும் தனது மனைவியான சந்திரகாந்தியுடனும் தாயாருடனும் சுகமாக அந்த ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.

“பிற நாட்டை எதிர்பார்க்காமல் உணவுப் பஞ்சத்தையும், உடைப் பஞ்சத்தையும் நீக்கமுடியாது என்று கூறுவதை நான் ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தியாவைப் போன்ற ஒரு தேசம் பிற நாடுகளுக்கு வேண்டிய உடையிலும், உணவிலும் பங்கு கேட்பது கூடாது. இந்தியாவில் செய்ய வேண்டியதெல்லாம், மக்களைக் கொண்டு சரியான முறையில் உற்பத்தியைப் பெருக்கி அதை வினியோகிப்பதே யாகும்.”

— காந்திஜி



ஜி. எஸ். சரஸ்வதி - கோபாலபுரம்

கேள்வி: எனக்குப் பற்கள் சொத்தையாய் இருக்கின்றன. என்னை எல்லோரும் 'சொத்தைப் பல்லி' என்கிறார்கள். எனக்கு ரொம்பவும் வெட்கமாய் இருக்கிறது. இதற்கு என்ன அண்ணா செய்வது?

பதில்: தங்கையே! வெட்கம் எதற்கு? வெட்கப்படாதே. நான் சொல்வதைச் செய்வாயா? சாக்கலேட் முதலியவைகளை நிறைய தின்றிருப்பாய். பல்லிலே இனிப்பு ஒட்டிக்கொண்டுவிடும். இனிப்பு உனக்கு மாத்திரந்தானா பிடிக்கும்? பூச்சிக்கும் பிடிக்கத் தானே செய்யும். பூச்சி அந்த பல்லில் ஒட்டிய இனிப்பைச் சாப்பிடுகிறது. இத்தோடு பல்லையும் சாப்பிடுகிறது. அதனால்தான் பல் சொத்தையாகிறது. ஆதலால் இனிமேல் இனிப்புப் பண்டங்களை அதிகமாகச் சாப்பிடாதே. கொஞ்சம் சாப்பிட்டாலும் சாப்பிட்டதும் நன்றாக வாயைக் கொப்பளிக்கவேண்டும். உன்னுடைய சொத்தைப் பல்லைப் பல் வைத்தியரிடம் காண்பிக்கவும். அவசியமானால் டாக்டர் சொத்தைப் பல்லைப் பிடுங்கி விடுவார். வலிக்காமல் 'நைஸா'கப் பிடுங்கிவிடுவார். இன்னொன்று: இப்பொழுது 'ஐஸ்புரூட்' முதலைகள் கிளம்பியிருக்கின்றன. அவைகள் பல்லைப் பிடுங்கிவிடும். ஜாக்கிரதை ஐஸ் புரூட் ஒழிக.

எஸ். பொன்னம்பலம் – லால்குடி

கேள்வி: வியர்க்கூறு உடம்பில் உண்டாகிறதே. அது எதனால்? என் நண்பனுக்கு முதுகில் நிறைய வியர்க்கூறு இருக்கிறது அதற்கு மருந்து என்ன?

பதில்: தம்பி, உடம்பில் உஷ்ணம் அதிகமாதலால் வியர்க்கூறு வருகிறது. அதற்குச் சரியான மருந்து, குளிர்ந்த நீரில் குளிப்பது. சந்தனத்தைக் குழைத்து தடவுவது. நுங்குச் சுளை நீரைத் தடவுவது. வியர்க்கூறு காற்றாய்ப் பறக்கும். எரிச்சல் தாங்க முடியுமானால், உப்பைப் பொடி செய்து உடம்பில் தேய்க்கலாம்.

ஆர். வி. கேசவன் - கோம்பை

கே: தினம் காலையில் வேப்பங் கொழுந்தைச் சாப்பிடுவது நல்லது என்கிறார்களே. அதனுடைய நன்மையை உடனே சொல், அண்ணா?

பதில் : தம்பி, வேப்பங்கொழுந்தில் இரும்பு சத்து, 'எ'வைட மின் சத்து, உயிர் சத்து, கொழுப்பு சத்து, தாதுப்பொருள், கார் போ ஹைடிரேட் அதிகமாக இருக்கின்றன. வேப்பங் கொழுந்து உடம்பை பலவகைகளாலும் வளரச் செய்வதுடன், நோய் அணு காமல் காப்பாற்றவும் செய்யும்.

எஸ். அப்துல் ரஹீம் - திருநெல்வேலி

கேள்வி : அணில் எந்த வருஷம், எந்த மாதம், எந்தத் தேதியில் ஆரம்பித்தது ?

பதில் : முதலாவது அணிலைப் பார்ப்பதுதானே. அதிலே பார்த்தால் 1947-ஆம் வருஷம் ஜூன் மாதம் 11-ந் தேதி புதன் கிழமை என்று போட்டிருக்கும்.

பி. செல்வராஜ் - தண்டையார்பேட்டை

கேள்வி : சாப்பிட்டபின் சோம்பு தின்பது நல்லதா ? கெட்டதா ? அதை எப்படி உபயோகிப்பது ?

பதில் : தம்பி, சோம்பு தின்பது கெடுதி அல்ல. நிறையத் தின்னக்கூடாது. சோம்பை இளவறுவலாக வறுத்து வைத்துக் கொண்டு தினம் சாப்பிட்டதும் அரைக்கால் வராகனெடைவரை சாப்பிடலாம். அப்படிச் சாப்பிடுவதால் ஜீரண சக்தியை அதிகப்படுத்தும்.

தே. மு. பாலசுப்பிரமணியம் - சென்னை 1.

கேள்வி : எங்கள் வீட்டில் எறும்பின் தொல்லை தாங்க முடியவில்லை. என்ன செய்தும் எறும்புகள் ஒழிவதாக இல்லை. இரவிலும் பகலிலும் வீட்டில் படுக்கவோ இருக்கவோ முடியாதபடி தொந்திரவு விளைவிக்கிறது. இதை ஒழிக்க என்ன வழி செய்வது?

பதில் : தம்பி, உனது எதிரிகளை வேரோடு ஒழிக்கவேண்டும். அதற்கு ஒரு அணுகுண்டு தேவை. அதுதான் டி. டி. டி. பொடி, டி. டி. டி. பொடியை எறும்புக்குழிகளில் தூவுக. அது மட்டும் போதாது. தீனிப்பண்டங்களை எறும்பு புகாதபடி பத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டும். உன் அம்மாவிடம் சொல்லி வீட்டின் முகப்பிலே கோலம்போடச் சொல்லு. கல்லுமாப் பொடியால் அல்ல. அரிசிமாப் பொடியால். பிறகு பார், வீட்டிற் குள்ளே எறும்பு வருகிறதா என்று.

பீ. நாராயணன் - திருநெல்வேலி

கேள்வி : எல்லோரும் என்னைத் தடியன் என்று கேலி செய்கிறார்கள். நான் நன்றாக ஓடியாடி விளையாடுகிறேன். சாயந்திரம் 'கம்பெல்சரி' விளையாட்டில் 'ஹாக்கி' தான் விளையாடுகிறேன். அப்படி இருந்தும் ஏன் எனக்கு தசையை வைத்திருக்கிறது? நீதான் ஒருவழி சொல்லவேண்டும்.

பதில் : தம்பி காலையில், ஒரு மைல் தூரம் ஓடு. வேகமாக ஓடாதே. பருப்பு, பால் இவைகளைக் குறைத்துச்சாப்பிடு. கீரையை

திறையச் சாப்பிடு. பிறகு பார் உடம்பை! உன் உடம்பு அழகாகத் தளதளவென்றிருக்கும்.

வி, கிருஷ்ணமூர்த்தி – சென்னை

கேள்வி: சேத்துப் புண்ணுக்கு என்ன மருந்து போட வேண்டும்?

பதில்: படுக்கப் போகும்பொழுது நன்றாகக் காலைக் கழுவு. பிறகு ஈரமில்லாமல் துடை. துடைத்ததும் தேங்காய் எண்ணெயைத் தடவு. இப்படி நான்கு நாட்கள் தடவினால் சேற்றுப் புண் மறையும்.

விஜயானந்த கிருஷ்ணன் - சேலம்

கேள்வி: மகாகவி பாரதியார் எப்பொழுது பிறந்தார்? எப்பொழுது இறந்தார் எனத்தெரியுமா? அவர் எதுவரை படித்திருக்கிறார்?

பதில். தம்பி, நமது மகாகவி பாரதியார் 1882-ஆம் வருஷம் கார்த்திகை மாதம் மூல நட்சத்திரத்தில் பிறந்தார். 1921-ஆம் வருஷம் செப்டம்பர் 11-ந் தேதி யன்று இறந்தார். அவர் நமக்கு அளித்த இலக்கியங்களைப் பார்க்கும்போது ரொம்ப ரொம்ப படித்திருக்கிறார் என்பது தெரிகிறது.



தாகூர்

இவர்தான் உலகம் போற்றும் இந்தியக் கவியரசர், ரவீந்திரநாத் தாகூர்.

'கீதாஞ்சலி' என்று ஒரு பாமாலை இயற்றியிருக்கிறார். அதில், "ஆண்டவனே! எனக்கு வயதாகி விட்டது. கண் தெரியவில்லை. மனித சமுதாயத்திற்கு என்னால் முடிந்த வரை இயன்ற தொண்டு புரிய, கள்ளங் கபடற்ற குழந்தை உள்ளத்தையும், ஓடியாடி விளையாடும் சிறுவர்களின் சுறு சுறுப்பையும், திடத்தையும் தந்து அருள் புரி. அதுபோதும். விடைதா" என்று பாடியுள்ளார்.

கண்டுபிடியுங்கள் ★ ★

இந்தப் படத்தை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். இதில் சில உயிர்ப் பிராணிகள் ஒளிந்து விளையாடுகின்றன. எங்கே பார்ப்போம்? கையில் ஒரு பென்சில் அல்லது பேனாவை எடுத்துக் கொண்டு, புள்ளிச் சித்திரத்தில் கோட்டை இழுத்துப் படம் போடுங்கள். முடிந்தால் வருணமும் தீட்டி அழகாய் இருக்கிறதா என்று பாருங்கள்.

அணில் சங்கம்

அங்கத்தினர் பெயர்

8131. ர. நடேசன், தெப்பக்குளம். 32. சி. ஜெபமாலைமரி, நாவல்பிட்டி, 33. டி. சந்திரடானியல், தஞ்சாவூர். 34. சுலோசனாதேவி, குடியாத்தம், 35. சொ. அழகப்பன், கண்டி. 36. சு. சுந்தரராமன், எழும்பூர். 37. கி. ஜமுனாபாய், கலவை. 38. ச. கதிர்வேலு, சுவால்பேட்டை. 39. ரா. சுந்தரம், திருவொற்றியூர். 8140. சீ. பாலசுப்ரமணியன், திருவொற்றியூர். 41. ரா. ராஜகோபாலன், அய்யம்பேட்டை. 42. கா. பழனியப்பன், கிழச்சிவல் பட்டி. 43. சி. ஜெயராமன், மதுரை. 44. ஜெ. சதானந்தம், செங்கல்பட்டு. 45. பா. மலையாண்டி, சொக்கநாதபுரம். 46. மீ. பழனி, தி. நகர், 47. தி. சகுந்தலா, சென்னை. 48. பி. ராமநாதன், சென்னை-5. 49. மு. பெரியசாமி லால்குடி, 8150. நா. ராமன், ராமநாதபுரம், 51. கு. ஜெனார்த்தன், பத்தலக் குண்டு, 52. கோ. ராமசுப்ரமணியன், கொடைக்கானல், 53. ப. வடிவேலா யுதம், பனையப்பட்டி, 54. ச. அபயம்பாள், கோவில்பட்டி, 55. சி. சுந்தர மூர்த்தி, விருத்தாசலம், 56. ரா. ராஜாராம், வந்தவாசி, 57. ச. சுசிலாபாய், ஆம்பூர், 58. வை. சந்தானகிருஷ்ணன், பள்ளி, நேவியனூர், 59. துரை, இராகவன், சென்னை. 8160. டி. எஸ். வாசன், வண்ணாரப்பேட்டை, 61. சா. வடிவேல், கரூர், 62. ரா, முத்து கிருஷ்ணன், வெட்பேரி, 63. சோ. கோதண்டராமன், தஞ்சாவூர், 64. ரா. சுவாமிநாதன், மாயவரம். 65. சீ. வெங்கட்டராமன், சென்னை, 6, 66. பா. ரங்கநாதன், கடலூர், என்.டி. 67. வே. கந்தசாமி, சென்னை, 68. வே. வரதராஜன், சென்னை, 69. சை. சையத் இஸ்ஹாக், 8170. வே. சீனிவாசன், ராயபுரம். 71. மு. லக்ஷ்மிபாய், ஆத்தூர், 72. எம்.டி. சுஜாத் அலி, கரூர், 73. கு. கோவிந்தாச்சாரி, கோவை, 74. என் இக்பரமுல்லா கான், கரூர், 75. மு. சம்மந்தம், மஞ்சகுப்பம், 76. சே. வாசுதேவன், கோவை 77. ந. விஸ்வநாதன், ஈரோடு, 78. த. ராஜன், கோவை, 79. ஈ. கணபதி, கோவை, 8180, பா. ராமமூர்த்தி, தாராபுரம், 81. ப்ா. சீனிவாசன், கோவை, 82. மு. முகமது மதார். உதகை, 83. கு. ராமசாமி, பேரூர், 84. ரா. நாராயணசாமி, தர்மபுரி, 85. சா. தனப்பால், காரைக்குடி, 86. கு. கணபதி, திருப்பரங்குன்றம், 87. சீ. கண்ணையன், சென்னை, 88. மி. பார்த்தசாரதி, மண்ணடி, 89. வெ. சுப்பிரமணியன், மயிலை, 8190. ம. ராஜேந்திரன், பரமகுடி, 91. து. ஜமால், சென்னை, 92. ப. சேதுராமன், திருச்சி, 93. சு. குமரவேல் வெட்பேரி, 94. வே. ராஜமாணிக்கம், நாமகிரிப்பேட்டை, 95. நா. ரவிந்திரா, அடையார், 96. ந. சக்கரவர்த்தி, சென்னை, 5. 97. கோ. செல்லையா, திருப்பரங்குன்றம், 98. ந. சீனிவாசன், எழும்பூர், 99. ந. ஜெயலக்ஷிமி, எழும்பூர், 8200. ரா. மதுரைசாமி, மதுரை, 1. ச. ஜெயமரி, செவ்வாய்ப் பேட்டை. 2. மு. நயினார், விக்கிரமசிங்கபுரம். 3. ப. ராஜமாணிக்கம், சேலம். 4. க. ஜோதிலிங்கம், சேந்தமங்கலம். 5. பொ. மகாதேவன்,

சென்னை. 6. அ. சுப்பிரமணியம், கண்ணங்குறிச்சி. 7. எப். எஸ். பாக்யம் எழும்பூர். 8. சினிவாசன், பொன்னகரம். 9. மாரியப்பன், அய்யம் பேட்டை. 8210. ரா. சந்திரமோகன், திருச்சி. 11. அ. மாயண்ணன், கோவை. 12. வே. முத்துச்சாமி, திருப்பரங்குன்றம். 13. ந. பால கிருஷ்ணன், சேலம். 14. மீ. சுந்தரம், மயிலை. 15. ஈ. பட்டாபிராமன், 16. மு. ஜெயராமன், மந்தவெளி. 17. கோ. தியாகராஜன், பண்ணுருட்டி 18. ச. திருவேங்கடம், பண்ணுருட்டி. 19. ரா. குப்புசாமி, குளித்தலை. 8220. ரா. அக்ஷயலிங்கம், இவனூர். 21. பெ. கெஜராஜம், தென்காசி. 22. ஜெ. நாராயணன், சென்னை—1. 23. ரா. லக்ஷிமிநாராயணன், சென்னை—10. 24. கோ. தியாகராஜன், சென்னை. 25. சீ. சிவலிங்கம், பெரம்பூர். 26. ச. நரசிங்கராவ், அந்தியூர். 27. வெ. இராமநாதன், செங்கல்பட்டு. 28. ரா. சேதுராம், சோழவந்தான். 29. நா. ரங்கசாமி, பொள்ளாச்சி. 8230. மூ. ருக்மணி, கோவை. 31. ப. முத்துவேலு, அரக்கோணம். 32. ஷாவுல்ஹமீத், மதுரை. 33. எல். சந்திரசேகரன், 34. திண்டுக்கல். வி. ஏ. பாப்ஜான், ராபர்ட்ஸன்பேட்டை. 35. வி. ஏ. லத்தீப், ராபர்ட்ஸன்பேட்டை. 36. க. குப்புசாமி, ராபர்ஸன்பேட்டை. 37. சு. ராஜாராம், பெரியகுளம். 38. சி. ராஜா, சென்னை. 39. சீ. நாகராஜன், சென்னை. 8240. ம. அப்துல்ரவூப், வாலாஜாபாத். 41. ம. விட்டல்ராவ், பெங்களூர். 42. வெ. ராஜமாணிக்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர். 43. பெ. மணிவேல், சோழவந்தான். 44. பெ. உலகப்பன், திண்டுக்கல். 45. எஸ். ஹுசேன்ஷெரீப், தாம்பரம். 46. ஈ. பார்வதிபாய், குன்னூர். 47. பி. ராஜமாணிக்கம், கோவை. 48. அ. கோவிந்தசாமி, கூடலூர். 49. வி. ராஜகோபால், செங்கல்பட்டு. 8250. அ. முகமதுமிதார், மதுரை. 51. நா. தேவராஜா, ராஜபாளையம். 52. கி. கோவிந்தசாமி, கோவை. 53. செ. காமராஜன், கரூர். 54. ரா. பாலகிருஷ்ணன், அய்யம்பேட்டை. 55. ரா. ராமுடு, அய்யம்பேட்டை, 56. நூ. ராஜ்முகமது. ராஜகிரி. 57. அப்துல்காதர்பாஷா, ராஜகிரி. 58. ரா. ராமனுதன், அய்யம்பேட்டை. 59. மூ. கந்தசாமி, திருப்பூர். 8260. எஸ். சற்குணம், பரமக்குடி. 61. அ. அப்துல்காதர், பனைக்குளம். 62. ர. ஜெகநாதன், ராயவரம். 63. பால கிருஷ்ணன், கும்பகோணம். 64. ம. சிவஞானம், துறையூர். 65. பி. அப்துல்அலிம், புதுவை. 66. ம. மகாலிங்கம், சென்னை. 67. சு. சேது ராமன், ராயவரம். 68. எஸ். அமீர்ருதின், திருவாரூர். 69. கா. ஆதிகேசவன், சென்னை—21. 8270. ப. சொக்கலிங்கம், சென்னை—21 71. மு. பாலசுப்ரமணியன், வேப்பேரி, 72. ஜி. ராமானுஜம், மதுரை. 73. மு. அடைக்கலம், நாகர்கோவில், 74. ர. ஜெயராமன், புதுவை. 75. சி. நாராயணசாமி, தஞ்சாவூர். 76. ந. ராஜகோபாலன், கீழ்க்கனி. 77. ரா. மாரியப்பன், தலைக்காடு. 78. சி. சுந்திரராஜன், கோவை. 79. ச. ஆனந்தன், கோவை.

(தொடரும்)

⊕

கைக்குத்தல் அரிசி, தேகாரோக்கியத்திற்குச் சிறந்தது.

காய்கறிகளை நிறையச் சாப்பிடுங்கள்.

குழந்தைகள் சர்க்கரையை அதிகமாய் உபயோகிப்பது கெடுதல்.

நீங்களும் படிக்கலாம்

மகாகவி பாரதியார்

எழுதியவர்: **வ. ரா.**

"......பாரதியாரை நேரில் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற வருத்தம் நம்மில் பலருக்கு உண்டு. இந்தப் புத்தகத்தைப் படித்தால் அந்தக் குறை பெரும்பாலும் தீர்ந்துவிடும்" என்று 'கல்கி' இந்தப் புத்தகத்தைப் பற்றிச் சொல்லுகிறார்.

இதன் விலை ரூ. **1-8**

(தபால் செலவு தனி)

இது சக்தி வெளியீடு

சக்தி காரியாலயம், சென்னை-14

அணில் வெளியீடுகள்

அணில் அண்ணன் சொல்லிய
- ○ முடியாது
- ○ மூன்று கேள்விகள்
- ○ புஷ்கோட்
- ○ டிரிங் டிரிங்

பஞ்சேரி ஈச்வரன் சொல்லிய
- ○ சந்திரவளையம்

'லக்ஷ்மி' சொல்லிய
- ○ அதிர்ஷ்ட தேவதை

தி. கி. பா. சு. மணியன் சொல்லிய
- ○ மல்கோவா

'குகப்பிரியை' சொல்லிய
- ○ கிளிக்கோவில்

ஒவ்வொன்றும் ஓரணா
(தபால் செலவு தனி)

நடராஜன் சொல்லிய
- ○ சிலையும் உருவியும்

அணா : எட்டு

"அணில்" வருட சந்தா ரூ. 3
இரண்டு வருடங்களுக்கு ரூ. 5

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை, சென்னை-14

சென்னையில் அணில் ஏஜண்ட்:
நேரு நியூஸ் ஏஜன்சி,
லஸ் கார்னர், மைலாப்பூர்.

உள்ளே

தங்க மீன்	5
கடலோடியின் கதை	17
உலக மாதா	23
நீதிக் கதைகள்	25
அரசனுக்குப் பாடம்	29
ரமணியின் அதிர்ஷ்டம்	34
சுட்டிப் பையன்	37
பாரதியாரின் கதை	42
சிட்டு	43
பெஞ்சமின் பிராங்க்ளின்	44
நீயும் பாடலாம்	45
உனக்குத் தெரியுமா ?	46
இதையும் படியுங்கள்	47
பாப்பா பொம்மை	48
பேப்பர் பிறந்த கதை	49
மாய மோதிரம்	53
கேள்வியும் பதிலும்	57
கண்டு பிடியுங்கள்	60
அணில் சங்கம்	61
எழுத்தறிவுப் பரிசுப் போட்டி நெ. 1 (விடை)	63
எழுத்தறிவுப் போட்டி நெ. 3	64

ஆசிரியர் :
வை. கோவிந்தன்

சித்திரம் :
ஏ. செல்லையா, தணிகாசலம்

Regd. No. M. 4825 ANIL March 1950

இயந்திரக் கலை

அறிவு வளர்ச்சி, கைத் தொழில் அபிவிருத்தி, கலைப்பண்பு முதலியவைகளை மாணவர்களுக்கு அளிப்பதற்காக, அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ என்ற நகரத்தில் சமீபத்தில் இளைஞர்களின் பொருட் கண் காட்சி ஒன்று நடை பெற்றது. அதில் சுமார் 2000-ம் பள்ளிக்கூட மாணவர்கள் கலந்து கொண்டனர். சித்திரம், வர்ணஓவியம், நெசவு, நிட்டிங், மரச்சாமான்கள் செய்தல், வீடு கட்டுதல், எரோப்பிளேன் செய்தல் போன்ற பல பிரிவுகளில் மாணவர்கள் தமது அனுபவத்தை விளக்கிக் காட்டினர். மேலே உள்ள படத்தில் ஒரு மத்திய தர வகுப்பு மாணவன் "டெலிவிஷன்" என்னும் தொலை நோக்கிக் கருவியைப் பிரித்து ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறான்: இத்தகைய இயந்திரக் கலை ஆர்வம் நமது நாட்டிலும் பரவ வேண்டும்.

* * * *